Registered as a news paper.

பக்கங்கள்: பத்து + IV

விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2034 ஆவணி 09 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 ஜ.ஆகிர் 27 (26.08.2003) செவ்வாய்க்கிழமை இதழ்: 326

கர்ப்பிணி தாய்மாருக்கும், சிறார்களுக்கும் ஏற்ற போஷாக்கு நிறைந்த சத்து மா



ஜீவாகாரம்

அண்ணா தொழிலகம்

இணுவில் (சி-1407) T.P.-2223565



தியாகி திலீபனின் திருவுருவப்படத்தினை கப்டன் தூயவனின் தந்தை செல்லத்துரை திரைநீக்கம் செய்துவைக்கும் காட்சி.

## திலீபன் ஞாபகார்த்த நினைவுத்தூபி நேற்று நல்லூரில் திறந்துவைப்பு!

நல்லூர் பின்வீதியில் மீளமைக்கப்பட்ட தியாகி திலீபன் ஞாபகார்த்த நினைவுத்தூபி நேற்று திரைநீக்கம் செய்யப்பட்டது.

நேற்றுமாலை 4 மணிக்கு நல்லூர் கோட்ட எழுச்சிப்பேரவையின் செயலாளர் சி.வி.கே.சிவஞானம் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

இந்த நிகழ்வில் - பொதுச்சுடரை நல்லூர் கோட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் பொ.ஈஸ்வரன் ஏற்றி வைத்தார்.

ஈகச்சுடரை தேசிய கூட்டுறவு சபைத் தலைவர் கனகசபாபதி, பல்கலைக்கழக மீன்பிடியியல்துறை விரிவுரையாளர் சூசை ஆனந்தன், மாமனிதர் அரசரத்தினம், மாணவர் பேரவையைச் சேர்ந்த கண்ணன், தேசிய எழுச்சிப் பேரவை செயலாளர் சூசை சிறில், மாவீரரின் தாய்மார் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

தேசியக்கொடியை யாழ். மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி ஏற்றிவைத்தார்.


கப்டன் தூயவனின் தந்தை பெ.செல்லத்துரை திலீபன் ஞாபகார்த்த நினைவுத்தூபியை திரைநீக்கம் செய்து வைத்தார்.

தொடர்ந்து, தியாகி திலீபனின் திருவுருவப்படத்திற்கு தமிழ் தேசியக் (10 ஆம் பக்கம் பார்க்க)

# கண்காணிப்புக்குழு தலைவர் சம்பூரில் புலிகளுடன் பேச்சு!

## குரங்குபாஞ்சான் முகாம் குறித்து ஆராய்வு





(திருகோணமலை)

**குரங்குபாஞ்சானில் உள்ள விடுதலைப் புலிகளின் முகாம் விவகாரம் மற்றும் கிழக்குப் பகுதி நிலவரங்கள் குறித்து - போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் ஜெனரல் ரைவ்கேவ் ரெலவ்சனுக்கும், புலிகளின் திருகோணமலை மாவட்டக் கட்டளைத் தளபதி கேணல் பதுமனுக்கும் இடையிலான சந்திப்பு - நேற்று சம்பூரில் உள்ள புலிகளின் நடுவப் பணியகத்தில் இடம்பெற்றது.**

நேற்று விசேட விமானமூலம், சீனன்குடா விமானநிலையத்திற்குச் சென்ற கண்காணிப்புக் குழுத் தலைவர் ரெலவ்சன் தலைமையிலான குழுவினர், அங்கிருந்து கடற்படையினரின் படகுமூலம் சம்பூருக்குச் சென்றனர்.

காலை 11.30 மணிக்கு ஆரம்பமான இச்சந்திப்பு, சுமார் இரண்டரை மணித்தியாலயங்கள் வரை இடம்பெற்றது. இச்சந்திப்பில் புலிகளின் தரப்பில் கட்டளைத் தளபதி கேணல பதுமன், திருகோணமலை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் திலக் ஆகியோரும் - கண்காணிப்புக்குழுத் தலைவர் ரெலவ்சன் அவரது உதவியாளர், திருகோணமலை மாவட்ட கண்காணிப்புக்குழுத் தலைவர் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

மேற்படி சந்திப்பில் - குரங்குபாஞ்சான் முகாம், கிழக்கின் தற்போதைய (10 ஆம் பக்கம் பார்க்க)

## நல்லைக் கந்தன் ரதோற்சவம் இன்று!

(யாழ்ப்பாணம்)

வரலாற்றுப் பிரசித்திபெற்ற நல்லூர் கந்தசுவாமி கோயில் இரதோற்சவம் இன்று நடைபெறவுள்ளது.

இன்று காலை விசேட அபிஷேக ஆராதனையைத் தொடர்ந்து முருகப்பெருமான் 7 மணியளவில் தேரேறி வீதியுலா வருவார்.

இரதோற்சவத்தினைக் காண்பதற்காக வெளிநாடுகளிலிருந்தும் நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் பெருமளவிலான பக்தர்கள் கூடியுள்ளனர்.

காலை தேர்த்திருவிழாவைக் கண்டு தரிசிப்பதற்காக பெருந்திரளான மக்கள் இன்று கூடியிருந்தமையைக் காணக்கூடியதாக இருந்தது. (111)

## ஹர்த்தாலால் திருமலை நகர் முற்றாக ஸ்தம்பிதம்!

(திருகோணமலை)

திருகோணமலையில் நேற்று நடத்தப்பட்ட ஹர்த்தால் பூரண வெற்றியென ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

திருகோணமலை வாழ் பொங்கு தமிழ் சமூகத்தினரால் இந்த ஹர்த்தாலுக்கான அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

நேற்று திருகோணமலையில் அமைதியான முறையில் நடந்த ஹர்த்தாலினால் - அரச, அரசசார்பற்ற நிறுவனங்கள் எதுவும் இயங்கவில்லை. போக்குவரத்துக்கள் நடைபெறவில்லை. பாதசாரிகளின் நடமாட்டம் கூடக் குறைந்து காணப்பட்டதாக தகவல்கள் தெரிவித்தன. (04,10)

## குரங்குப்பாஞ்சான் முகாம் விவகாரம்; கண்காணிப்புக்குழு புதிய யோசனை!

### பேச்சாளர் அக்னஸ் தெரிவிப்பு

(திருகோணமலை)

விடுதலைப் புலிகளின் குரங்குப்பாஞ்சான் முகாமை விட்டு அகல, போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு புதிய யோசனையொன்றை முன்வைத்துள்ளது.

யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் ரெலவ்சன், நேற்று திருகோணமலையில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிச் சென்று, இந்தப் புதிய யோசனையை முன்வைத்துள்ளார்.

நேற்றைய சந்திப்புப் பற்றி சந்திப்பில் கலந்துகொண்ட போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பேச்சாளரான அக்னஸ் பிரகர் டோட்ரயர் தெரிவிக்கையில் -

திருகோணமலைப் பகுதி குரங்குப்பாஞ்சான் குளத்தில் விடுதலைப் புலிகள் அமைத்திருக்கும் முகாம் பற்றியே நேற்றைய பேச்சுவார்த்தைகள் அமைந்தன.

கண்காணிப்புக்குழுவின் தலைவர் ரெலவ்சன் - முகாமை அகற்ற வேண்டுமென்ற ஆணையை, விடுதலைப் புலிகள் பின்பற்றி ஆகவேண்டும் என்றும்- இது தொடர்பாக புதிய யோசனையையும் முன்வைத்தார். அந்த யோசனையை வெளியிட (10 ஆம் பக்கம் பார்க்க)

## இரு முஸ்லிம்கள் கைது!

வாழைச்சேனையைச் சேர்ந்த இரு முஸ்லிம் இளைஞர்கள் காணாமற்போனது தொடர்பாக இரண்டு பேர் சந்தேகத்தின்பேரில பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வாழைச்சேனையில் உள்ள காவத்தைமுனைப் பகுதியில் வைத்து (10 ஆம் பக்கம் பார்க்க)

### விண்ணாணம் விநாசியர்



நல்ல நெருக்கமாயிட்டினம்போல...

### ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவின்

## கடும் பாதுகாப்பின் கீழ் அமிர் பிறந்தநாள் விழா!

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடந்த அமிர்தலிங்கத்தின் பிறந்த தின நிகழ்வில் கலந்துகொள்ள அழைக்கப்பட்டவர்கள்- ஜனாதிபதியின் பாதுகாப்புப் பிரிவினரால் கடுமையான முறையில் சோதனையிடப்பட்டு அவமதிக்கப்பட்டனர்.

கொழும்பு, சரஸ்வதி மண்டபத்தில் நடந்த இந்த நிகழ்வில் கலந்துகொள்வதற்காகச் சென்ற ஈ.பி.ஆர்.எல்.எவ்.செயலாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன், தமிழ்க் காங்கிரஸ் பிரமுகர் குமரகுருபரன் ஆகியோரை வாசலில் வைத்துச் சோதனை செய்த பின்பே உட்செல்ல அனுமதிக்க முடியும் என்று ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவினர் தெரிவித்தனர். இதற்கு அவர்கள் எதிர்ப்புத் தெரிவிக்கவே, இது மேலிட உத்தரவு என்று தெரிவிக்கப்பட்டது. தாம் இந்நிகழ்வுக்கு அழைக்கப்பட்டவர்கள் எனக்கூறியும் - சோதனையிடாமல் உட்செல்ல அனுமதிக்கமுடியாது என, ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவினர் தெரிவித்தனர்.

இதன்பின்னர் நிகழ்வு ஏற்பாட்டாளர்களான அரவிந்தன், முகுந்தன் இருவரும் அவர்களை உட்செல்ல அனுமதிக்கும்படி கோரியபோதும், (10 ஆம் பக்கம் பார்க்க)

EXPOAIR your friend in the skies...

இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை....

ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021 ~ 2223891 2226297

0712348888 0712349999 074512666 01360290 01360291

email . jaffna @ expoavi . com. (சி -1139)

எக்ஸ்போஎயார் வான் வெளியில் உங்கள் தோழன்...



நாட்டில் நிரந்தர சமாதானம் நிலைக்க நல்லூர்க் கந்தனை பிரார்த்திக்கின்றோம்

விவசாயிகளின் தேவைகளைக் கருத்திற்கொண்ட தொழில்நுட்பத்துடன் வடிவமைக்கப்பட்ட
குறைந்த எரிபொருள் பாவனையும், வேகமான ஆக்கத்திறனும் கொண்ட

**புத்தம் புதிய நான்கு சில்லு டிரக்டர்கள்**

**Rs. 230,000/-**

# இப்பொழுது யாழ். மண்ணில்.....

- சுழல் கலப்பைகள்.
- மண் புரட்டு கலப்பைகள்
- இழுவை பெட்டி - $2^1/_2$ தொன் எடை கொண்ட (8' x5'x15') உயர்த்தி சாய்விக்கவல்லவை
- அரிசி ஆலைகள் - நெல்லைச் செலுத்தி மணித்தி யாலத்துக்குள் 500 -600 Kg உமி அகற்றி பொலிஸ் செய்து குற்றிய அரிசியைப் பெறலாம். (ஒரே தடவையில்)
- உதிரிப்பாகங்கள் தாராளமாகவும் மலிவாகவும் கிடைக்கும்.
- மூன்று வண்ணங்களில் (செம்மஞ்சள், நீலம், சிவப்பு)
- பலதரப்பட்ட விவசாயக் கருவிகள் இணைக்கலாம்.







2 வருட உத்தரவாதம் ஐந்து இலவச சேவைகள்

**GUDWIL**







டிராக்ரர்களையும் விவசாய உதிரிப்பாகங்களையும் தாமதமின்றி பெற்றுக் கொள்ள இன்றே நாடுங்கள்....

# AMT TRANSPORT SERVICES

பருத்தித்துறை வீதி,
இருபாலை சந்தி, கோப்பாய்,
யாழ்ப்பாணம்.
தொ.பே : 021 222 5784

(சி.1402)

அடியார்கள் குறை தீர்க்க தேரேறி பவனி வரும் நல்லூர் கந்தனுக்கு அரோகரா! வெற்றிவேல் முருகனுக்கு அரோகரா!!



- சர்வதேச புகழ்பெற்ற "லுமாலா", "ஹீரோ" மிதிவண்டி விற்பனை முகவர்கள்
- தரம்மிக்க நில்கமால் "NILKAMAL" கதிரைகள், பிளாஸ்ரிக் தளபாடங்கள், முன்னோடி விற்பனையாளர்கள்.



**50 ஆண்டுகளுக்கு மேலாக**

வாடிக்கையாளர் மனதில் நன்மதிப்புப் பெற்றுநிலைத்து நிற்பவர்கள்

# இ.சுப்பிரமணியம் அன்கோ

இல.068. கே.கே.எஸ். வீதி, சுன்னாகம்.

(சி.1404)

**யாழ். நகரில் 1 ஆவதாக முற்றிலும் நவீனமயப்படுத்தப்பட்ட**

# Super Market

Annai Nagaa Food City

- மளிகைப் பொருட்கள்
- ஐஸ்கிறீம் வகைகள்
- பழப்பானங்கள்
- வீட்டுப்பாவனைப் பொருட்கள்
- தங்க நகைகள்
- மருந்து வகைகள்
- அழகுசாதனப் பொருட்கள்
- அன்பளிப்புப் பொருட்கள்
- இலத்திரனியல் பொருட்கள்

மேலும் பல ....

உங்கள் தினசரி தேவைகளுக்கு நியாய விலையில் தரமான பொருட்களை ஒரே கூரையின் கீழ் பெற்றுக்கொள்ள



175, கே.கே.எஸ. வதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: (021) 2225515, (021) 2225223

(சி.1403)

# கடற்படையை நவீனமயப்படுத்துவதில் அரசியல்வாதிகள் அசிரத்தையாம்!

## கடற்படை வட்டாரங்கள் அதிருப்தி

(கொழும்பு)

**அதிநவீன ஆயுதங்கள் பொருத்தப்பட்டதும், வேகமாகச் செயற்படக்கூடியதுமான - போர்க்கப்பல்களைக் கடற்படைக்குக் கொள்வனவு செய்வதில், அரசியல்வாதிகள் அக்கறைகாட்டவில்லை என்று, கடற்படையினர் தரப்பில் குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளன.**

கடற்புலிகளின் போரிடும் வலுவுக்கு ஈடுகொடுக்கவும், ஆயுதக்கடத்தல் நடவடிக்கைககளை முறியடிப்பதற்கும் - கடற்படையினரின் ஆயுதபலம் அதிகரிக்கப்படவேண்டும் என்று கடற்படையினர் கோரிவந்தனர்.

அரசியல்வாதிகள் மட்டத்தில் இந்தக் கோரிக்கை குறித்துப் போதிய ஆதரவின்மையால், கடற்படையினருக்கான நவீன ஆயுதங்களையும் போர்க்கப்பல்களையும் கொள்வனவு செய்வதில், வேகமாகச் செயற்பட முடியாதுள்ளதாகக் குற்றச்சாட்டுக்கள் கிளம்பியுள்ளன.

அமெரிக்காவிடம் இருந்தும், இஸ்ரேலிடம் இருந்தும் - கடற்படைக்கான ஆயுதங்களைக் கொள்வனவு செய்வது தொடர்பான, பேச்சுக்கள் குறித்து, அமைச்சர் ராஜித சேனாரத்ன அதிருப்தி தெரிவித்துள்ளார்.

இதேவேளை, அமெரிக்கா மற்றும் இஸ்ரேலிடமிருந்து - கடற்படைக்கான 30 பீரங்கிகளைக் கொள்வனவுசெய்யும் நடவடிக்கையில், தரக் கட்டுப்பாட்டைக் கவனத்தில் கொண்ட போது, அமெரிக்காவிடமே வாங்குவதெனத் தீர்மானிக்கப்பட்டது.

ஆனால், இரு நாடுகளிலும் தயாரிக்கப்பட்ட ஆயுதங்களின் தரத்தில்-மாறுபாடு இருப்பதால், பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன - இந்த விடயத்தில் அதிகநாட்டம் காட்டவில்லை எனவும், கடற்படையினர் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன், கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் தயா சந்தகிரி ஆகியோர் - இஸ்ரேலுக்குச் சென்று, கடற்கலங்களை நவீன மயப்படுத்துவது குறித்து ஆராய்ந்து வந்தனர்.

ஆனால், இஸ்ரேலிடம் இருந்து ஆயுதங்களைக் கொள்வனவு செய்வதில் - பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நாட்டம் காட்டவில்லை என்றும், கடற்படையினர் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனாலேயே, ஆயுதக் கொள்வனவில் தாமதம் ஏற்படுவதாகவும் - கடற்படை வட்டாரங்கள் தகவல் தெரிவித்தன.

## வடமத்திய மாகாண ஆளுநராக ஜெகத் பாலசூரிய

(கொழும்பு)

வடமத்திய மாகாணத்தின் புதிய ஆளுநராக டொக்டர் ஜெகத் பாலசூரியாவை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நியமித்துள்ளார்.

கேகாலை மாவட்டத்தைச் சேர்ந்த இவர் - பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தில், வீடமைப்பு அபிவிருத்தி பிரதி அமைச்சராக இருந்த, காலஞ்சென்ற பி.பி.பாலசூரியாவின் புதல்வர் என்பது குறிப்பிடத்தக்கது.

## வருடாந்த பொங்கல் நிகழ்வும் சங்காபிஷேகமும்

(மட்டுவில்)

மட்டுவில் வடக்கு மருதடிப்பிள்ளையார் ஆலயத்தில், ஆவணிச் சதுர்த்தியை முன்னிட்டு எதிர்வரும் 31 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வருடாந்தப் பொங்கல் நிகழ்வும், மறுநாள் திங்கட்கிழமை சங்காபிஷேகமும் இடம்பெறவுள்ளது. இடப்பெயர்வின் பின் இவ்வாண்டே இந்த நிகழ்வுகள் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.





கரடியனாறு தேனகம் விருந்தினர் விடுதியில் நடந்த சந்திப்பில் கலந்து கொண்ட முஸ்லிம்கள் தரப்புப் பிரமுகர்களை முதலாவது படத்திலும், புலிகளின் பிரமுகர்களை இரண்டாவது படத்திலும் காணலாம்.

# முஸ்லிம்கள் கொலை, கடத்தல்களுக்கும் புலிகளுக்கும் தொடர்புகள் ஏதுமில்லை

## அலிஸாகிர் மௌலானா தெரிவிப்பு

(அம்பாறை)

அம்பாறையில் இரு முஸ்லிம் இளைஞர்கள் கொலை செய்யப்பட்டமை மற்றும் இரு இளைஞர்கள் காணாமற்போனமை தொடர்பாகவும் - விடுதலைப் புலிகளுக்கும் எந்தவிதத் தொடரபும் இல்லையெனக் கொள்கைத் திட்டமிடல் அமைச்சின் ஆலோசகர் அலி ஸாகிர் மௌலானா - கரடியனாறு தேனகம் விருந் தினர் விடுதியில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது, தெரிவித்துள்ளார்.

இக்கலந்துரையாடலில் மட்டு-அம்பாறை மாவட்டச் சிறப்புத் தளபதி ரமேஸ், தளபதி பிரபா, புனர்வாழ்வு பொறுப்பாளர் துரை ஆகியோர் கலந்துகொண்டனர்.

இதுபற்றி கொள்கைத்திட்டமிடல் அமைச்சின் ஆலோசகர் தொடர்ந்து கூறுகையில் -

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள சமாதானச் சூழலைச் சீர்குலைக்கும் முகமாகச் சில தீயசக்திகளின் திட்ட மிட்ட செயலே இது எனவும். தற்போது பொலிஸ், இராணுவத்திற்கு ஆட்சேர்ப்பு நடவடிக்கைகளில் அரசு ஈடுபட்டு வருவதாகவும் குறிப்பிட்ட அவர், இவ்வாறான நடவடிக்கைகள் மீண்டும் யுத்தத்தை ஆரம்பிப்பதற்கான செயலெனவும் தெரிவித்துள்ளார்.

# பொலிஸார் மீது பொதுமக்கள் நம்பிக்கை கொள்ளவில்லை!

## ஆசிய மனித உரிமைகள் ஆணைக்குழு பணிப்பாளர் தகவல்

பொலிஸார்மீது இலங்கை மக்கள் நம்பிக்கை வைத்துச் செயற்படவில்லை என்று - ஆசிய மனித உரிமைகள் ஆணைக்குழுவின் நிறைவேற்றுப் பணிப்பாளர் பாகில் பெர்னாண்டோ தெரிவித்தார்.

கடந்த சனிக்கிழமை, கொழும்பில் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,

பொலிஸ் நிலையங்கள் - பொலிஸ் அதிகாரிகளின் வன்முறை நிறைந்த இடமாக இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

பல இடங்களிலிருந்து பொலிஸ் நிலையங்களில் விசாரணைக்காகத் தடுத்து வைக்கப்பட்ட சந்தேக நபர்கள், மரணமானது தொடர்பான முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்றும அவர் மேலும் தெரிவித்தார்.

# அம்பாறையில் ஹர்த்தால் குறித்து வதந்தி: பொலிஸாரால் விசேட பாதுகாப்பு ஒழுங்கு!

## பொதுமக்கள் மத்தியில் பதற்றம்

(அம்பாறை)

அம்பாறை மாவட்டத்தில் நேற்று, ஹர்த்தால் அனுஷ்டிக்கப்படும் என பரவிய வதந்தியால், மக்கள் மத்தியில் பதற்றம் நிலவியது.

பொலிஸ் சேவையில் - முஸ்லிம் இளைஞர்களை அதிகளவில் சேர்த்துக்கொள்வதற்கு எதிராகவும், சாய்ந்த மருதுப்பகுதியில் இரு இளைஞர்கள் மர்மமானமுறையில் கடத்தப்பட்டமைக்கு எதிராகவும் இந்தக் ஹர்த்தால் ஒழுங்கு செய்யப்பட்டிருப்பதாகவும் வதந்திகள் பரவின. இவ்வாறு பரப்பப்பட்ட வதந்தியால், இப்பகுதி மக்கள் பெரிதும் பதற்றத்துக்குள்ளானார்கள்.

அம்பாறைப் பகுதியில் நேற்று அதிகாலை நான்கு மணிமுதல் பொலிஸாரும், விசேட அதிரடிப் படை யினரும் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர். இதனால், இப்பகுதியின் இயல்புநிலை பாதிக்கப்பட்டது.

இந்த நிலைமை தொடர்பாக கருத்துத் தெரிவித்த பொலிஸ் அத்தியட்சகர் - அர்த்தமற்ற ஹர்த்தால் அழைப்புகளைத் தொடர்ந்தும் அனுமதிக்கப்போவதில்லை எனவும், ஹர்த்தாலுக்குத் திடீரென அழைப்பு விடுதல் - சட்டத்தை அமுல்படுத்துவோருக்குத் தடை போடும் முயற்சியாகவே அமையும் என்றும், இவ்வாறான ஹர்த்தால் அழைப்புகள் விடுவோர் மீது தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

கல்முனை பாதுகாப்பு இணைப்பதிகாரியும், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரும் ஆகிய ஆ.ரு.யு.சீரவ்டீன் தகவல் தெரிவித்தார்.

# குமார் கொலை சந்தேக நபர் படுகொலை செய்யப்பட்டதால் விசாரணைகள் முடக்கம்!

## உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க

(கொழும்பு)

குமார் பொன்னம்பலம் மற்றும் தென்மாகாண அமைச்சர் சண்டி மல்லி ஆகியோரின் படுகொலையுடன் தொடர்புடைய இரண்டு பிரதான சந்தேகநபர்களும், கொலை செய்யப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் இனங்காணப்பட்டுவிட்டதாகவும், விரைவில் இவர்கள் கைது செய்யப்படுவர் என்றும் பொலிஸ்மா அதிபர் ஆனந்தராஜா தெரிவித்தார்.

• இந்தக் கொலைகளுடன் தொடர்புடைய நபர்களைக் கைது செய்வதற்காகத் தென்மாகாண பிரதிப் பொலிஸ்மா அதிபருக்குத் துணையாக, பொலிஸ்தலைமையகத்தில் இருந்து விசேட பொலிஸ் குழுவொன்று அனுப்பப்பட்டுள்ளது.

குமார் பொன்னம்பலம் படுகொலையுடன் சம்பந்தப்பட்ட சந்தேகநபர் கொலை செய்யப்பட்டுள்ளதால், அவரது படுகொலையின் பின்னணியில் யார் இயங்கியவர்கள் என்பதைக் கண்டறிய முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

இந்தப் படுகொலைகளுக்குக் காரணம் - இரண்டு பாதாள உலகக் குழுக்களிடையேயான அதிகாரப் போட்டியேயாகும். சூரிய வெவப் பகுதியில் ரணவீர மற்றும் விம்பட்டி ஆகிய பாதாள உலகக் கோஷ்டிகளுக்கிடையில் அதிகாரப் போட்டி எழுந்துள்ளது என்று கூறப்படுகிறது.



கண்டி - போகம்பறைச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் கைதிகளுக்கு தியானப் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருவதைப் படத்தில் காணலாம்.

# கிளிநொச்சி வைத்தியசாலைகளில் மருத்துவ அதிகாரிகள் பற்றாக்குறை

கிளிநொச்சி மாவட்டத்தில் வசிக்கும் ஒரு இலட்சத்து 39 ஆயிரம் மக்களுக்கும் சேவையாற்ற என, கிளிநொச்சியிலுள்ள வைத்தியசாலைகளில் நான்கு மருத்துவ அதிகாரிகளே பணியாற்றி வருகின்றனர்.

கடந்த 20 வருடங்களுக்கு முன்னர் சுகாதார திணைக்களத்தினால், மேற்படி மாவட்டத்தில் 13 மருத்துவ அதிகாரிகள் சேவை புரிவதற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்ததும், அந்த வெற்றிடங்கள் இதுவரை பூர்த்தி செய்யமுடியாத நிலையில, தற்போது நான்கு மருத்துவ அதிகாரிகளே பணியாற்றி வருகின்றனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கை சுகாதார திணைக்களத்தின் 2001 ஆம் ஆண்டுக்கான புள்ளிவிபரத்தின்படி, 2 ஆயிரத்து 233 மக்களுக்கு ஒரு மருத்துவ அதிகாரி என்ற விகித்தில் பணியாற்ற வேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்தது. ஆனால், கிளிநொச்சி மாவட்டத்தில் - தற்போது நான்கு மருத்துவ அதிகாரிகள் மட்டுமே ஒரு லட்சத்து 39 ஆயிரம் மக்களுக்கு சேவையாற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## வவுனியா மாவட்டத்தில் மகளிர் சங்கம நிகழ்வு

வவுனியா மாவட்ட பெண்கள் மேம்பாட்டு நிறுவனம் நடத்தும் - மகளிர் அமைப்புக்கள் சங்கம நிகழ்வு அடுத்த மாதம் 4 ஆம், 5 ஆம் திகதிகளில் வவுனியா நகர மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந்த சங்கம நிகழ்வில், வடக்கு-கிழக்குப் பகுதியிலுள்ள மகளிர் அமைப்புக்களைச் சேர்ந்த ஆயிரம் பேர் பங்குபற்ற உள்ளதாக, வவுனியா மாவட்ட பெண்கள் மேம்பாட்டு நிறுவனத்தின் பிரதிநிதி ஒருவர் தெரிவித்துள்ளார்.

மகளிர் அமைப்புக்கள் இணைந்து, பெண்களின் அபிவிருத்தி தொடர்பாக முக்கிய தீர்வுகளை எடுக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

## சுயதொழில் முயற்சியாளருக்கான பொதுக்கூட்டம்

சுயதொழில் உற்பத்தியாளர்களை ஊக்குவிக்கும் முகமாக-யாழ்.வைத்தீஸ்வராக் கல்லூரியில் நாளை முதல் வெள்ளிக்கிழமை வரை நடத்தப்படவிருக்கும் மாகாண மட்ட கைத்தொழில் கண்காட்சியில், பங்குபற்றும் அனைத்து அரச, தனியார் நிறுவனங்களுக்கும், சுயதொழில் முற்சியாளர்களுக்குமான பொதுக்கூட்டம் - இன்று காலை 10 மணிக்குக் கச்சேரி மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் - கண்காட்சியில் பங்கு பற்றும் அனைவரையும் தவறாது கலந்துகொள்ளும்படி மாவட்ட அலுவலர் ராகவன் அறிவித்துள்ளார்.

# திருவாவடுதுறை ஆதீன சுவாமிகள் குருகுலத்திற்கு விஜயம் செய்தார்!

(யாழ்ப்பாணம்)

திருவாவடுதுறை ஆதீன சிவப்பிரகாச தேசிய பரமாச்சாரிய சுவாமிகள் - நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்துள்ளார்.

யாழ்.வந்த இவர் - வடமராட்சியிலுள்ள வல்லிபுரக்கோயிலுக்குச் சென்று, பின்னர் மாலை 5 மணிக்கு ஆனைப்பந்தியிலுள்ள குருகுலத்துக்கு வருகை தந்தார்.

இவரைச் சர்வதேச இந்துமத குருபீடாதிபதியின் பொதுச்செயலாளர் சந்திரசேகர சர்மா வரவேற்றார். பின்பு சுவாமிகளிடம் அங்குள்ள இந்து குருமார்கள் ஆசி பெற்றனர்.

யாழ்ப்பாணத்தில் தங்கி நிற்கும் திருவாவடுதுறை ஆதீனசுவாமிகள்- வண்ணை வைத்தீஸ்வரன் கோயில், நல்லூர், ஈழத்துச்சிதம்பரம், கீரிமலை நகுலேஸ்வரர், மாவிட்டபுரம், செல்வச்சந்நிதி, வல்வெட்டித்துறை சிவன் முதலான திருத்தலங்களுக்குச் சென்று தரிசனமும், அருளுரைகளையும் வழங்கவுள்ளார்.

# கட்டாக்காலி நாய்களின் தொல்லை அண்மைக்காலமாக அதிகரித்துள்ளது

அண்மைக்காலமாக நாய்க்கடிக்கு இலக்கானோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக - யாழ்.போதனா வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

கட்டாக்காலி நாய்களை அழிப்பதற்குப் பயன்படுத்தப்படும் நச்சுப் பொருள் முடிவடைந்து விட்டமையால், கட்டாக்காலி நாய்களை அழிக்க முடியவில்லை. இதனால், கட்டாக்காலி நாய்களின் எண்ணிக்கை அதிகரித்திருந்தது. ஆனால், தற்போது அந்த மருந்துப்பொருள் கிடைக்கப் பெற்றுள்ளமையால், கட்டாக்காலி நாய்களின் தொல்லையைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

படையினரின முகாம்களை அண்டிய பகுதிகளிலேயே கட்டாக்காலி நாய்களின் தொல்லை அதிகமாக வுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அதேவேளை, சர்வோதய வீதி, ஆவரங்கால் பகுதியில் விசர்நாய்க்கடிக்கு இலக்கான அதேஇடத்தைச் சேர்ந்த தர்மலிங்கம் கமலசரோஜினி எனும் பெண்மணி, சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, ஒரு மணிநேரத்திற்குள் மரணமடைந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## பட்டப்பகலில் வீடு புகுந்து திருட்டு

அரியாலை சித்திவிநாயகர் ஆலயத்தை அண்டியுள்ள வீடு ஒன்றில், திருடர்கள் படடப்பகலில் புகுந்து எழுபத்தையாயிரம் ரூபா ரொக்கப் பணம், நகைகள், கணினி உட்பட்ப் பல பொருட்களைத் திருடிச் சென்றுள்ளனர்.

நேற்றுமுன்தினம் மதியம் 12 மணியளவில் வீட்டில் உள்ளவர்கள் திருமண நிகழ்வு ஒன்றிற்குச் சென்றிருந்தவேளை, அந்நேரத்தைப் பயன்படுத்தித் திருடர்கள் ஜன்னல்களை உடைத்து, அதன் வழியாக உட்புகுர்து, தமது கைவரிசையைக் காட்டியுள்ளனர்.



கந்தரோடை தமிழ் கந்தையா வித்தியாலய பரிசளிப்பு விழாவில் கலந்துகொண்ட திருமதி.சிவசக்தி ஆதவன் - பாடசாலை மாணவன் ஒருவருக்குப் பரிசில் வழங்குவதைப் படத்தில் காணலாம். (101)

# புனரமைக்கப்படாத வீதிகளால் போக்குவரத்துக்கள் பாதிப்பு

கிளிநொச்சி மாவட்டத்தில் கண்டாவளைக் கிராமத்தில் பிரதான வீதி- போர்ச்சூழல் காரணமாகக் கடந்த பல வருடங்களாகப் புனரமைப்பு செய்யப்படாமல் இருந்து வருவதால், போக்குவரத்துச் செய்யும் மக்கள் பெரும் துயரங்களை அனுபவித்து வருகின்றனர்.

கண்டாவளைக்கு பேருந்து போக்குவரத்துச் சேவை ஆரம்பிக்கப்பட்டு, தினமும் இரு சேவைகள் நடைபெற்று வருகின்றன. மோசமான நிலையிலுள்ள வீதியில் - பஸ்சேவையும் மிகுந்த சிரமத்தின் மத்தியிலே நடைபெறுகிறது.

அத்துடன், வீதியின் இரு மருங்கிலும் பற்றைகள் காணப்படுவதால், வாகன விபத்துக்கள் ஏற்படும் ஆபத்தும் ஏற்பட்டுள்ளது. இதனைக் கருத்திற்கொண்டு, சம்மந்தப்பட்டவர்கள் வீதியைத் திருத்துவதற்கு நடவடிக்கை எடுப்பார்களா என மக்கள் எதிர்பார்க்கின்றனர்.


வாழ்க வளமுடன்




எட்டாவது அகவையில்



பெயர் : ம.நிக்ஷன்
முகவரி: உயரப்புலம், ஆனைக்கோட்டை.

ஒன்பதாவது அகவையில்

பெயர் : கெ.சுபாகரன்
முகவரி: கரவெட்டி மேற்கு, கரவெட்டி.



பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

வாழ்க வளமுடன்



சிறாரின் பெயர்:------------------------------
முகவரி :------------------------------
பிறந்த ஆண்டு:------------------------------
கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

------------------------
பெற்றார் ஒப்பம்


# நாயாற்றில் மீளக்குடியேறிய குடும்பங்கள் அடிப்படை வசதிகளின்றி பெரும் அவலம்

(ஆழியவளை)

முல்லைத்தீவு நாயாற்றுப் பகுதியில் மீளக்குடியேறிய குடும்பங்கள்- அடிப்படை வசதிகள் எதுவுமின்றி, மிகவும் அவலவாழ்க்கை வாழ்ந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

1984 ஆம் ஆண்டு இடம்பெயர்ந்து, சுமார் 19 வருடங்களின் பின், 20 குடும்பங்கள் நாயாறில் இவ்வருட முற்பகுதியிலிருந்து குடியேறி இருக்கின்றனர்.

இம்மக்களுக்குக் குடிநீருக்கான கிணற்று வசதி, சிறார்களுக்கான முன்பள்ளிகள், மருத்துவ வசதி, மலசலகூட வசதி, பொருட்கள் வாங்குவதற்குரிய வர்த்தக நிலையங்கள், எரிபொருள் போன்ற அடிப்படை வசதிகள்கூட இல்லை.

அரசசார்பற்ற நிறுவனங்கள் எம்மை வந்து பார்த்துவிட்டுச் செல்கின்றன. ஆனால், இதுவரை எவ்வித வசதிகளும் ஏற்படுத்தித் தரவில்லை என, மக்கள் வேதனைப்படுகின்றார்கள்.

எல்லா மக்களையும் போன்று எம்மையும் கவனித்து, எமக்கு அடிப்படை வசதிகளை ஏற்படுத்தித்தர வேண்டும் என, அங்கு மீளக்குடியேறியுள்ள மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (122)

# முன்பள்ளி மாணவர்களுக்கு இலைக்கஞ்சி விநியோகம்

பூநகரிப் பிரதேசப் பாடசாலைகள், முன்பள்ளிகள் ஆகியவற்றின் மாணவர்களுக்குச் சத்துணவு இலைக்கஞ்சியினை - கியுடெக் நிறுவனம் வழங்கிவருகின்றது.

மேற்படி பாடசாலைகள் மற்றும் முன்பள்ளிகளுக்கு உலகதரிசனம்- இலைக்கஞ்சியை வழங்குவதற்கு முன்வந்திருந்தும், இதுவரை மேற்படி பாடசாலைகளுக்கு, இலைக்கஞ்சியினை வழங்கநடவடிக்கை மேற்கொள்ளவில்லை எனவும், இதன் காரணமாகக் கியுடெக் நிறுவனமே- பூநகரி பிரதேச பாடசாலைகளுக்கும் மற்றும் முன்பள்ளி மாணவர்களுக்கும்- இலைக் கஞ்சியினை வழங்கிவருகிறது எனக் கிளிநொச்சி மாவட்ட கியூடெக் இணைப்பாளர் கணேசபிள்ளை தெரிவித்தார். (17)

# அளவெட்டிப் பகுதியில் ஒரேஇரவில் மூன்று இடங்களில் திருட்டு சம்பவம்

(அளவெட்டி)


அளவெட்டிப் பகுதியில் ஒரே இரவில் மூன்று இடங்களில் திருட்டுக்கள் இடம்பெற்றுள்ளன. அண்மையில் இடம்பெற்ற இச்சம்பவங்களில், அளவெட்டி - கும்பழாவளை பிள்ளையார் ஆலயத்தில் நான்கு லட்சம் ரூபா பணமும், பெறுமதி வாய்ந்த நகைகளும் திருடப்பட்டுள்ளன. ஆலயக்கூரைப் பகுதியைப் பிரித்து, உள்நுழைந்த திருடர்கள்- காவலாளியை மிரட்டிவிட்டு, இக்கொள்ளையில் ஈடுபட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அதே இரவு இடம்பெற்ற இன்னுமொரு சம்பவத்தில் - அளவெட்டி அருணோதயாக் கல்லூரியிலிருந்த ஒலிபெருக்கிச் சாதனங்களைத் திருடுவதற்கு எடுக்கப்பட்ட முயற்சி, காவலாளி விழித்துக்கொண்டதால் முறியடிக்கப்பட்டது.


பாடசாலைக்கு அருகிலுள்ள, வைரவர் ஆலயத்தின் கூரையைப் பிரித்து, உட்புகுந்த திருடர்கள் - அங்கு எதுவும் அகப்படாமையால், ஏமாற்றமடைந்து திரும்பினார்கள்.

அண்மைக்காலமாக அளவெட்டிப் பகுதியில், திருடர்களின் தொல்லைகள் அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. அதேவேளை, சம்பவ இடங்களுக்கு அருகில் இராணுவத்தினரின் முகாம் ஒன்று அமைந்திருக்கின்றமையும் குறிப்பிடத்தக்கது.

# இன்னும் 20 வருடங்களில் சந்திரனில் நாம்



இப்பொழுது சந்திரனில் மனிதவாழ்க்கைக் குரிய நிலைமை இருக்கின்றதா என, ஆராய்ச்சி கள் நடைபெற்றுக்கொண்டு வருகின்றன. இன்னும் 20 வருடங்களில், சந்திரனில் வாழலாம் என்று விஞ்ஞானிகள் அடித்துக் கூறுகின்றார்கள். பூமியின் பெண் குழந்தை என்று அழைக்கப்படும் சந்திரனில் முதன் முதல் ஆராய்ச்சிக்காக



ஐரோப்பாவினால் அனுப்பப்பட்ட முதலாவது விண்கலம் 'ஸ்மார்ட் - 1' இன் ஆராய்ச்சிகள் வெற்றிகரமாக நடைபெற்றுக் கொண்டுவருகின்றன. இந்த விண்கலம், தானியங்கி விண்கலமாகும். இது சூரியசக்தியாலும், ஒரு வகையான இரசாயன எரிபொருளாலும் இயங்கக்கூடியது. இது 15 மாதகாலமாக சந்திரனில் இருந்து, நீர் மற்றும் கனியுப்பு படிவுகள் பற்றிய ஆராய்ச்சியினை நடத்தியிருக்கின்றது. இதற்கிடையில் நாஸாவிலிருந்து 2009ம் ஆண்டு ஒரு விண்வெளி ஓடத்தினை செலுத்த அமெரிக்கா திட்டமிட்டிருக்கின்றது. இதேவேளை - சீனா, இந்தியா ஆகிய நாடுகளும் விண்வெளி ஓடங்களை சந்திரனுக்கு அனுப்பி, ஆராய்ச்சிகள் செய்யத்திட்டமிட்டு, இருக்கின்றன. இப்படியானால் சந்திரனில் குடியேறப்போவது எந்த நாட்டு மக்கள்?

# நூற்றுக்கணக்கான சிறுவர் பராமரிப்பு



ஏறக்குறைய 400 சிறுவர் பராமரிப்பு நிலையங்கள், இங்கிலாந்தில் அண்மையில் தடைசெய்யப்பட்டிருக்கின்றன. ஏனெனில், அங்கே பிள்ளைகள் முறையாகப் பராமரிக்கப்படுவதில்லை. மற்றும், நிர்வாகச் சீர்கேடுகள் அதிகம் நடைபெறுவதால் தான், ஏறக்குறைய 10,500 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக உள்ளூர் பொலிஸ் நிலையங்கள் கூறுகின்றன. ஆனால், சில நிலையங்களுக்கு மட்டும் 38,700 கட்டளைகள் பறந்திருக்கின்றன - நன்கு பராமரிக்கச் சொல்லி. அங்கே இருக்கிற அலுவலர்களுடைய கெட்டபழக்கங்கள் - சிறுவர்களின் மனங்களை ஆழமாகப் பாதித்திருப்பது தெரிகின்றது. 89,500 நிலையங்கள் - பரிசோதிக்கப்பட்டு, அவற்றில் 59 வீத நிலையங்களை மேலும் சில மாற்றங்களுடன் நடத்துமாறு கேட்கப்பட்டிருக்கின்றது.

## நிலையங்களுக்கு மூடுவிழா!

ஆனால், இந்த நிலையங்களை நடத்துபவர்கள் - தாங்கள் நன்கு சிறுவர்களைப் பராமரிப்பதாகவும், ஆனால், சில நிலையங்களில் இப்படியான குறைபாடுகள் இருப்பதாகவும் ஏற்றுக்கொள்கிறார்கள்.

இது இப்படியிருக்க, சிறுவர் பராமரிப்பு நிலையங்கள் - நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே செல்கின்றன. இது எங்கே போய் முடியுமோ தெரியவில்லை.

# சந்திராசனம்



**குருவணக்கம் -**


**முதல் நிலையாக விரிப்பின் மீது நிமிர்ந்து நிற்கவேண்டும். இரண்டு கால்களும் ஒன்றாக சேர்த்து வைக்க வேண்டும். இரண்டு கைகளையும் தலைக்கு மேல் தூக்கி மூச்சை வெளியில் விட்டுக் கொண்டு, பின்புறமாக 45 பாகை அளவில் பிறை செய்யவேண்டும். அப்படியே வானத்தைப் பார்த்து வானபிதாவை வணங்கவேண்டும். முடிந்தவரை அப்படியே நிற்க வேண்டும். பின் மூச்சை உள்ளுக்குள் இழுத்துக்கொண்டு, 90 பாகை அளவில் நிமிர்ந்து நிற்கவேண்டும். இவ்வாறு 10 முதல் 20 தடவை செய்ய வேண்டும். இறுதியாக ஒருதடவை முன் குனிந்து பாதகஸ்தாசனம் செய்ய வேண்டும். கைகள் இரண்டும் தரையைத் தொட வேண்டும். மூச்சை வெளி விடவேண்டும். பூமாதேவியை வணங்க வேண்டும்.**

**நன்மைகள்:-**

**ஆஸ்த்துமா, என்புருக்கி, காசநோய், நீரிழிவு, இருதய பலவீனம், வாய்த்துர் நாற்றம், வயிற்றுக் கோளாறு, மூத்திரக் கோளாறு, தலைப்பாரம் கண்ணெரிச்சல், மூக்கடைப்பு, கூன் முதுகுவலியை சீர்செய்யும் மலச்சிக்கல் நீங்கும். பெண்களுக்கு மாதவிடாய் ஒழுங்காக கழிவாகும். சுகப்பிரசவம் உண்டாகும். பெண்களுக்கு அதிகமாகப் பால்சுரக்கும், மலட்டுத்தன்மை நீங்கும். இளமையைக் கொடுக்கும். ஆயுளை அதிகரிக்கும்.**




# வெற்றியளித்த கதிர்த்தொழிற்பாட்டுக்கு



சவ்வோக் என்ற இடத்தில் இருக்கின்ற அணுமின்னிலையத்துக்கு, அண்மையில் வசிக்கின்ற மக்கள் இதுவரை காலமும் கதிர்த்தொழிற்பாட்டு விளைவு காரணமாக, சொல்ல முடியாத துயரங்களை அனுபவித்திருக்கின்றார்கள். தற்போது பொட்டாசியம் அயடைட் குளிசைகள் இந்தக் கதிர்த்தொழிற்பாட்டு விளைவுகளைக் குறைக்கும். ஆதலால், அதனை உட்கொள்ளத் தலைப்பட்டிருக்கின்றார்கள். இந்தக் குளிசைகள், கதிர்த் தொழிற்பாட்டு விளைவுகளால் ஏற்படும் தைரொய்ட் சுரப்பிநோய்களை குணப்படுத்தும் என, நம்பப்படுகிறது. ஆரம்பத்தில் 180 குடும்ப உறுப்பினர்களுக்கு மட்டுமே கொடுக்கப்பட்ட இந்தக் குளிசைகள், மீதியுள்ள எல்லா மக்களுக்கும் கொடுக்கப்பட இருக்கின்றன. சில மக்கள்

## எதிரான குளிசை

இந்தக் குளிசைகளால், ஏதேனும் பக்கவிளைவுகள் இருக்குமோ என, அஞ்சுகின்றார்கள். இந்தக் குளிசை மூலம் வேறு விதமான கதிர்தொழிற்பாட்டு நோய்களைக் குணமாக்க முடியாது.

ஆனால், அண்மையில் பெறப்பட்ட தகவல்களின்படி- இந்தக் குளிசை தொடர்ந்தும் தாக்குப்பிடிக்குமா என்பதனைப் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.

# அண்டவெளியில் மறைவான இடங்களில் ஆராய்ச்சி




அமெரிக்க விண்வெளிக்கூடமாகிய நாஸாவினால் அனுப்பப்பட்ட 'A$2bn' விண்கலம் தன்னுடைய பணியினை வெற்றிகரமாக முடித்துவிட்டு, திரும்பியிருக்கின்றது. இது அண்டவெளியில் பல இடங்களில் கால்பதித்து விட்டு, திரும்பியிருக்கின்றது. தற்போது செந்நிறக் கதிர்மூலம் ஆராய்ச்சி செய்கின்ற முறை பிரபல்யமாகவுள்ளது. விண்வெளி ஆராய்ச்சியாளர்கள் மற்றும் சாதனங்களால் அடையமுடியாத இடங்களை எல்லாம் ஆராய்வதற்கு, இக்கதிர்கள் பெரிதும் உதவுகின்றன. இதேவேளை - இன்னுமொரு விண்கலமாகிய 'டெல்ட்டா 2' என்பதும் வெகுவிரைவில் அமெரிக்காவினை அடைய இருக்கின்றது. ஊதாக் கதிர்களைக்கொண்ட தொலைநோக்கியினைக் கொண்டு, அண்டவெளியில் காணப்படுகின்ற மனிதர்களால்- அடையமுடியாத கோள்கள், நட்சத்திரங்கள் ஆகியவற்றினை ஆராய்ச்சி செய்யக்கூடியதாக இருக்கின்றது. சில கிராமங்களில் காணப்படக்கூடிய தூசுத்துணிக்கைகளையும் தாண்டி, இந்தக் கதிர்கள் செயற்படுகின்றன.

அண்மையில் நாஸாவில் அற்புதமான சில கண்டுபிடிப்புக்களாக 'சந்ரா எக்ஸ்ரே' கருவி, 'கொம்ட்டன் காமா' கதிர்க் கருவி ஆகியனவும், இப்படியான ஆராய்ச்சிகளுக்குப் பயன்படுத்தப்பட்டு வந்தன.


ஆனால், ஐரோப்பிய அண்டவெளி ஸ்தாபனத்தினரால், 2007 ஆம் ஆண்டு கண்டுபிடிக்கப்பட இருக்கின்ற மிகப் பெரிய செந்நிறக்கதிர்களைக் கொண்ட தொலைகாட்டிதான், மேலும் இந்த ஆராய்ச்சிகளுக்கு வலுசேர்க்கும் என நம்பலாம்.

# இது மூடிய தொலைநோக்கி



எல்லோருக்கும் தெரிந்த ஒரு விடயம் - 1969 ஆம் ஆண்டு - நீல் ஆம்ஸ்ட்ரோங், முதன்முதலில் சந்திரனில் காலடியெடுத்துவைத்தார். ஒருகாலத்தில் விண்வெளி பற்றிய விடயங்களில் ஆர்வம் உள்ளவர்கள் - ஒரு பத்திரிகை மூலம், விளம்பரப்படுத்தப்பட்டு அழைக்கப்பட்டார்கள். ஆனால், அது தோல்வியில் முடிந்தது. ஏனெனில், விண்வெளி பற்றிய விருப்பம் கடந்த காலங்களில் குறைவாகவே இருந்தது.

ஆனால், இது நடந்து 30 வருடங்களின்பின், மனிதனுடைய நாட்டம் - விண்வெளியில் அதிகமானது. நன்கு மூடப்பட்டதும், 61 cm கண்ணாடியாலானதுமான தொலைகாட்டிகள் - ஜோர்டன் ஜோன்ஸ் என்பவரினால், முதன்முதலில் அறிமுகப்படுத்தப்பட்டது. ஆரம்பத்தில் இது அவ்வளவாகப் பரபரப்பாக இல்லாவிட்டாலும், காலம் செல்ல - மக்கள் அடிக்கடி இதன்மூலம் விண்வெளியைக் கண்டார்கள். ஆரம்பத்தில், பூமிக்கு அருகிலுள்ள கிரகங்களை மட்டுமே இதன்மூலம் ஆராய்ச்சி செய்யக்கூடியதாக இருக்கிறது. ஆனால், எதிர்காலத்தில் - 55,760,000 km தூரத்திலுள்ள கிரகங்களையும் பார்க்கமுடியும் என விஞ்ஞானிகளால் நம்பப்படுகிறது.



இந்தத் தொலைகாட்டி மூலம், சில வேளைகளில் - சிலகிரகங்களைப் பார்க்கமுடியாது. ஏனெனில், பெருமளவு தூசித்துணிக்கைகள் இதனை மறைத்துக் கொண்டிருக்கின்றன. ஆனால், அதிஷ்டவசமாகச் சில - இருளான இடங்களிலுள்ள கோள்களை, இதன்மூலம் பார்க்கக்கூடியதாக உள்ளது. இந்த மூடிய அறைத்தொலைநோக்கி - 1972 இற்கும் 1986 இற்குமிடையே அமைக்கப்பட்டது. இது அமைந்த இடம், அப்போதைய பெறுமதியில் 50 ஸ்ரேலிங் பவுண் மட்டுமே.

ஆனால், மக்கள் இதற்கு அருகில் குடியிருக்க அதிகம் விரும்புகிறார்கள். இப்பொழுது இந்த இடத்துக்கு மிகவும் கிராக்கி.

# திரை விமர்சனம்

## அலாவுதீன்



குப்பத்துவாசிகளால் ஒட்டுமொத்தமாகத் தத்தெடுக்கப்பட்ட ஒரு அநாதையின் கதை. "அலாவுதீனும் அற்புத விளக்கும்" படம் பார்த்துவிட்டு வரும்போது கிடைத்த குழந்தை என்பதால் "அலாவுதீன் என்று பெயரிடுகிறார்கள்.

பிரபுதேவாதான் அலாவுதீன். "அப்பா!" என்று அழைக்க.... குப்பத்திலிருந்து 100 அப்பாக்கள் வருவதும், அப்படியே 'அம்மா", "தம்பி", "தங்கச்சி" என்று அவர் கூப்பிடும்போது, நூற்றுக்கணக்கான நபர்கள் வருவதும் குதூகலமான ஆரம்பம்.

அவர் வாழ்வின் காதல், பாசம், சோகம் எல்லாவற்றையும் கலகலப்புடன் சொல்ல ஆசைப்பட்டிருக்கிறார் இயக்குநர். அதில் (பின்) பாதியளவு வெற்றியும் பெறுகிறார்.

நிஜ அலாவுதீன் கதையைக்கேட்ட குப்பத்துக் குழந்தைகள், தங்கள் அலாவுதீனுக்கும் ஒருஅற்புத விளக்குக் கிடைத்தால் குறைகள் எல்லாம் தீருமே என்று நினைக்கிறார்கள். அதை மெய்யாக்கவொரு விளக்கைத் தயார்செய்யும் பிரபுதேவா - குப்பத்து மக்களின் குறைதீர்க்கக் கொள்ளையடிப்பது புதுவிடயம். அந்தப் பொருளை வைத்து அற்புத விளக்கை பூதம் தந்ததாக நம்பவைத்து, குப்பத்தை மேம்படுத்துகிறார் அவர்.

கதாநாயகி ஆஷிமா - அவருக்காக ஒரு கோடீஸ்வரன் மாப்பிள்ளையை எதிர்பார்த்திருக்கும் அப்பா மணிவண்ணனின் அட்டகாசம் படத்தின் பெரிய பலம். குப்பத்துப் பிரபுதேவாவை கோடீஸ்வரன் என்று அவர் நம்பும் காட்சிகள் கலகலப்பானது. கோவணம் கட்டிக்கொண்டு கிரிக்கெட் ஆடும் குப்பத்துச் சிறுவனான டெண்டுல்கருக்கு ஒரு மட்டை வாங்கித்தருவதாகப் பிரபுதேவா செல்போனில் சொல்ல, அதைக்கேட்கும் மணிவண்ணன் அவரைச் சச்சின் டெண்டுல்கருக்கே மட்டை வாங்கித்தரும் வல்லவராக நினைப்பது, காதில் பூ என்றாலும் கலகலப்பான சிரிப்'பூ'.

எல்லா மத வழிபாடுகளும் அத்துப்படியான பிரபுதேவா, ஒவ்வொரு முறையும் கொள்ளை அடித்துவிட்டு தப்பிக்கும்போது மசூதி, தேவாலயம், கோயில் என்று புகுந்து மறைவது நல்ல உத்தி.

அரசாங்கத்தையே ஆட்டிப்படைக்கும் சர்வவல்லமை படைத்தவராகவரும் ரகுவரன் மிரட்டுகிறார். கொள்ளை ஒன்றைச் செய்யும்போது, வெட்டுண்ட அவரது கட்டை விரலை வைத்துக்கொண்டு - பிரபுதேவா "பிளாக்மெயில்" செய்து, தன் காரியங்களைச் சாதிக்கிறார். வெட்டுண்ட பிறகும், ரகுவரன் - பல காட்சிகளில் 'விரல் தெரிய' நடித்திருப்பது ஏன் என்று தெரியவில்லை.

ஒளிப்பதிவாளர், இசையமைப்பாளர், கலைஇயக்குநர்கள் மூவரும் பாராட்டுக்குரியவர். அந்தப் "பொம்மலாட்டக் கற்பனை"ப் பாடலில் இயக்குநரின் ரசனை அற்புதம்.

தற்கொலை செய்துகொள்ளும் நோக்கில் சாப்பாட்டில் விஷம் கலந்துவைத்திருக்கும் பூவிலங்கு மோகன் குடும்பத்தினர், பசியோடுவரும் பிரபுதேவாவிற்கு சாப்பாடு போட மறுப்பது நெகிழ்சியான காட்சி.

அதைப்போலவே ரகுவரன்தான், தன் தந்தை என்று அறியும் பிரபுதேவா, அந்த உண்மை தெரிந்தால் குப்பத்து மக்களின் அன்பை இழக்க நேரிடும் என்று, அதை வெளியில் சொல்லக்கூடாது என்று சத்தியம் வாங்கு இறுதிக்காட்சியும் நன்று. அலாவுதீனும், ஆங்காங்கே சிரிப்பும்.

# சோபிக் வைரஸ் ஏற்படுத்திய பெருஞ்சந்தேகம்

சோபிக் என்பது ஒரு வகையான கணினி வலையமைப்பினைத் தாக்கக்கூடிய வைரஸ். இது கூடுதலாக **e-mail** இனைத்தாக்கும் திறன் கொண்டது. அண்மையில் பெறப்பட்ட தகவல்களின்படி, இந்த வைரஸ் ஏறத்தாழ 23 மில்லியன் **e-mail** பிரதிகளை சேதமாக்கியிருக்கின்றது. கடந்த வெள்ளிக்கிழமைக்கும், ஞாயிற்றுக்கிழமைக்குமிடையில் இந்த வைரஸ தன்னுடைய விளையாட்டினை எல்லாக் கணினிகளிலும் தொடங்கியது. அதில் என்ன புதினம் என்றால், இது கணினிகளில் காணப்படுகின்ற வைரஸ், எதிர்ப்புத் தரவுகளையும், மீறிப் பரவியது தான். இது பரவியவுடன், கணினி வல்லுநர்கள் என்னவென்று, தெரியாமல் குழம்பியநிலையில் தரவுகள் அழிக்கப்பட்டன. அத்துடன், இது கணினி வலையமைப்புக்கும் பரவத்தொடங்கியது. பல நிறுவனங்கள் தங்களுடைய கணினி சேவைமையத்துடன் தொடர்புகொண்டு நிலைமையை விளக்கியபோது, இலட்சக் கணக்கான கணினிகள், இந்த வைரஸினால் தாக்கப்பட்டிருப்பது தெரிந்தது.



ஏற்கனவே, சோபிக் வைரஸ், ஜனவரிமாதம் கணினிகளைத் தாக்கியது யாவருமறிந்த விடயம். இது கணினி உலகில், ஒரு சவாலாகத்தான் இருக்கின்றது. இதன் காரணமாக கணினி வல்லுநர்கள் தேவையில்லாத **e -mail** செய்திகளை அழித்துவிடுமாறு - கணினிப் பாவனையாளர்களுக்கு அறிவுறுத்தியுள்ளார்கள். கடந்த திங்கட்கிழமை அமெரிக்க அலுவலர்கள் தங்களுடைய அலுவலகக் கணினிகளின் **e mail** களைத் திறந்து பார்த்தபோது, எல்லாவற்றிலும் **'Re'** என்று போடப்பட்டதைப் பார்த்தார்கள். அதுதான் வைரஸ் தாக்கியதற்கான அறிகுறி.


இது சீனாவையும் விட்டுவைக்கவில்லை. ஏறக்குறைய 30%மான கணினிப் பாவனையாளர்கள், இந்த வைரஸால் பாதிக்கப்பட்டு இருக்கின்றார்கள். இது மிகவும் வேகமாகப் பரவக்கூடிய வைரஸாகக் காணப்படுகின்றது. ஆனால், ஒருசில வைரஸ் எதிரி நிறுவனங்களுடைய கணினி வாடிக்கையாளர்கள் தப்பியும் இருக்கின்றார்கள். ஆனால், மிகவும் சோகமான கதை. கடந்த செவ்வாய்கிழமை கனடா நாட்டின் எல்லா விமானசேவைகளும், இந்த வைரஸ் காரணமாக இடைநிறுத்தப்பட்டது. எது எப்படியிருப்பினும், கணினி இருக்கின்ற இடமெல்லாம் வைரஸ் காய்ச்சல் பரவும் என்பதில் ஐயமில்லை.

# செயற்கை இதயம்



செயற்கை முறைமூலம், இதயத்தினை உருவாக்குவதற்கான ஆராய்ச்சிகளில், பெருமளவு வெற்றி கிடைத்திருக்கின்றது. ஆனால், இதயம் தயாரிக்கப்படுகின்றது. சதைகள் மிகவும் பலமானதாக இல்லாத காரணத்தால், இரத்தச்சுற்றோட்டத்தில் சில சிக்கல்கள் தோன்றியுள்ளன. இதயநோய் காரணமாக, பிரித்தானியாவில் 300 பேர் ஒவ்வொருநாளும் இறக்கின்றார்கள். இதற்குக் காரணம், இதயநோய்க்கு செயற்கைமுறையில் சில சிகிச்சைகள் கொடுப்பதாகும். இதில் பிரசித்திபெற்றது சிறு இயந்திரத்தனமான பம்பிகளை இதயத்துக்குப் பாவிப்பதாகும். இது இதயத்தின் இரத்த ஓட்டத்தினைக் கூட்டிக்குறைத்து, இரத்தக் குழாய்களில் பாதிப்பை ஏற்படுத்துகின்றது. சில செயற்கை இதயங்கள், பல காலத்துக்குத் தொடர்ந்தும் தாக்குப்பிடிப்பதில்லை. அதற்குக் காரணம், அதற்கு இருக்கின்ற சில குறைபாடுகளாகும். அண்மையில் உருவாக்கப்பட்ட சில செயற்கைச் சதைகள், பட்டிகள் மற்றும் சில இரசாயன மாற்றங்களுடன் வந்திருக்கின்றன. அத்துடன், இவை பழைய பம்பிகள் போலல்லாது 'அல்ட்ரா வோனிக்' கருவியுடன் வருவதால், செயற்கையான துடிப்பினையும் எதிர்பார்க்கக்கூடியதாக இருக்கின்றது. இது ஒரு சிறிய மின்கலம் மூலம் தொழிற்படக்கூடியதாக வடிவமைக்கப்பட்டிருக்கிறது. இதன் மூலம் இதய நோய்களுக்கு ஒரு நிரந்தரத் தீர்வு கிடைக்கலாம்.

# வயது போன மூளை



எமது உடலில் காணப்படுகின்ற மிகச்சிக்கலான அங்கம் மூளையாகும். ஆனால், இப்போது மூளை பற்றிய ஆராய்ச்சிகளில் ஒரு புதுமையான அம்சம் ஒன்று முளைத்திருக்கின்றது. மனிதனுக்கு வயது செல்லச்செல்ல மூளைக்கு என்ன நடக்கிறது என்பதுதான். உண்மையில் இளமையான மூளைக்கும், வயோதிப மூளைக்கும் இடையில் மிகப்பெரிய வித்தியாசம் இருப்பதை, ஆராய்ச்சியாளர்கள் ஒத்துக்கொள்கின்றார்கள். வயோதிப மூளைக்கு ஞாபகமறதி வருவதும், இதன் காரணமாகத்தான். உண்மையில் மூளையின் ஞாபக சக்தி இளமையில் தொடர்ந்தும் இயங்கிக்கொண்டிருக்கும். ஆனால், வயது செல்லச் செல்ல மூளையின் ஞாபக சக்தியால், சில விடயங்களை மீட்கமுடியாமல் போகின்றது. அதற்குக் காரணம் மூளையின் கலங்கள் செயலிழந்து போவதாகும். ஆனால், ஒரு வயதுவந்தவருடைய மூளைக்கலங்கள் - ஒரு பிள்ளையின் மூளைக்கலங்களிலும் பார்க்க நன்குவிருத்தியடைந்து காணப்படுகின்றது.

வயோதிப மூளையின் சிலவிடயங்களைத் தொகுத்துச் சேகரித்து, வைக்கமுடியாமல் இருப்பதும் ஞாபகமறதிக்கு ஒரு காரணம். உண்மையில் மூளை ஒரு சிக்கலான அங்கம்.

ஆனால், விஞ்ஞானிகள் செயற்கையான மூளை மூலம், வயோதிபர்களின் மூளையினை இளமையாக்கினாலும் ஆச்சரியப்படுத்துவதற்கில்லை.

# போர்த்துக்கல் நாட்டின் தீயை கட்டுப்படுத்த உதவிய செய்மதி



அண்மையில் போர்த்துக்கல் நாட்டில் ஏற்பட்ட காட்டுத்தீ ஐரோப்பிய நாட்டின் ஒரு விண்வெளி நிறுவனத்தின் உதவியுடன்- செய்மதிமூலம் கட்டுப்படுத்தப்பட்டிருக்கின்றது. போர்த்துக்கல் நாட்டில்- வெப்பம், வரட்சி காரணமாக, அடிக்கடி காட்டுத்தீ மக்கள் வாழ்கின்ற குடியிருப்புக்களையும் நோக்கிவரக் கூடியதாக உள்ளது. இதனைக் கட்டுப்பாட்டுக்கள் கொண்டுவர - 'என்விசட்', 'ஆர்ட்டெமிஸ்' என்ற இரண்டு செய்மதிகள் பாவிக்கப்பட்டிருக்கின்றன. இந்த செய்மதிகளுடைய தகவல்கள், ரோம் நகருக்கு அண்மையில் இருக்கின்ற ஒரு தளத்தினால் கட்டுப்படுத்தப்பட்டிருக்கின்றன. ஆனாலும், பெருமளவு காடு அழிக்கப்பட்டிருக்கின்றது. ஆனால், சர்வதேச அளவில் ஏற்படுகின்ற பெரிய அழிவுகளை, இந்த செய்மதிகள் மூலம் கட்டுப்படுத்தலாம் என்று, ஒரு உண்மை வெளிவந்து இருக்கின்றது. அண்மையில் இந்தப் பாதுகாப்பு வலயத்திற்குள்- ஆர்ஜென்டீனா, கனடா, பிரான்ஸ், இந்தியா மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகள் இணைந்திருக்கின்றன. இயற்கை அழிவுக்கு, இனிமக்கள் செய்மதிகள் உதவியுடன் தாக்குப்பிடிக்கத்தான் போகின்றார்கள்.

# செவ்வாய் கிரகத்தில் தண்ணீர்?



அமெரிக்க விண்வெளிக் கூடமான 'நாஸா'- ஆரம்பத்திலிருந்து செவ்வாய்க்கிரகத்தில் தண்ணீர் இல்லை என்று கூறிக்கொண்டு வருகின்றது. ஆனால், அது பொய்த்துப்போகக் கூடிய நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கின்றது. ஆனால், விஞ்ஞானிகள் ஒரு தசாப்தகாலமாக ஆராய்ச்சிகளையும் கண்டுபிடிப்புக்களையும், செய்துகொண்டு வருகின்றார்கள். நீர் இருப்பதற்கான அறிகுறிகள் தென்பட்டதாக, அவர்கள் கூறுகின்றார்கள். ஆனால், ஒரு சில விஞ்ஞானிகள் செவ்வாய்க்கிரகத்தில்- பனிக்கட்டிகள் இருப்பதாகக்கூட கூறுகின்றார்கள். ஆனால், மற்றைய சிலர், அவை சுண்ணாம்புக் கற்பாறைகள் என்று கூறிமறுதலிக்கின்றார்கள். சிலவேளைகளில், செவ்வாய்க்கிரகத்தில் பூமியைப் போன்ற தரைத்தோற்ற அம்சங்கள் தோன்றக்கூடிய வாய்ப்பு இருப்பதாகவும் நம்பப்படுகின்றது. நீர்கொண்ட சமுத்திரங்கள் தோன்றினாலும், அவை மனித வாழ்க்கைக்கு ஒவ்வாதவையாகத்தான் இருக்கும். ஏனெனில் - இங்கே'கானேற் படிவுகள்' அதிகமாகக் காணப்படுகின்றன.



# இரும்பு வைரஸ்களை வெளிப்படுத்துமா?

எமது உடலில் ஒளிந்துகொண்டிருக்கின்ற வைரஸ்களை, மிக நுண்ணிய இரும்புப் பிரிவுகளினை ஊசிமூலம் செலுத்தி அறிந்துகொள்ளலாம் என்பது, வைத்திய ஆராய்ச்சியாளர்களின் முடிவு. கூடுதலாக வைரஸ் பாதிப்பு அதிகமுள்ள **HIV** நோயாளிகளுக்குத்தான். இது பெரிதும் உதவுகின்றது. இது ஒரு விடயமல்ல. ஏனெனில் வைரஸ்களை கண்டுபிடிப்பதுடன் வேலைமுடியவில்லை அவற்றை எவ்வாறு அழிப்பது. இது வைத்திய நிபுணர்களின் ஆதங்கம், பரம்பரை அலகுகளைக் கண்டுபிடித்து - அதன்மூலம் சிகிச்சையளிக்கலாம் என்பது, ஆராய்ச்சிளார்களின் முடிவு. வைரஸ் உடலின் கலங்களை முதலில் தாக்கும், பின்பு அதன்மூலம் எல்லாத் தொழிற்பாடுகளையும் தடுக்கும். இதனை எவ்வாறு கட்டுப்படுத்துவது - இதற்கு வழி ஒரு வைரஸினை அழிப்பதற்கு, வேறு ஒன்றைச் செலுத்துதல். இதுதான் அண்மையில் வைரஸிற்கு எதிராக வைத்திய ஆராய்ச்சியாளர்களின் கண்டுபிடிப்பு.

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

*அவைஅறியார் சொல்லல்மேற் கொள்பவர் சொல்லின்
வகையறியார் வல்லதூஉம் இல்.*

*- திருக்குறள்.*

# நமது நோக்கு

## எடுபடாத பிரசாரம்!

இலங்கையில் அரசியல் ரீதியாக மிகவிரைவில் மாற்றங்கள் ஏற்படக்கூடும் என்றும், இந்தியா அதை உன்னிப்பாக அவதானிக்க வேண்டும் என்றும் - இலங்கையிலிருந்து ஆலோசனைகள் பறந்திருக்கின்றன. அப்படி யார்தான் இந்த ஆலோசனையை வழங்கியிருப்பார்கள் என்று யோசிப்பவர்களுக்காக - அவர் லக்ஷ்மன் கதிர்காமர்தான் என்பதையும் கூறிவிடுகிறோம்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் ஆலோசகராக இருந்து, இப்போதும் இலங்கையின் அரசியல் களநிலையில் முக்கியமான நபராக இருப்பவர் லக்ஷ்மன் கதிர்காமர். 'கோடரிக்காம்பு' அரசியல் உத்திக்காகவே பொ.ஐ.முன்னணியினாலும், சந்திரிகாவாலும் உருவாக்கப்பட்டவர்.

1994இல் பொ.ஐ.மு. ஆட்சி ஏற்பட்டபோது, வெளிவிவகார அமைச்சராகப் பதவியேற்ற அவர், உள்நாட்டு, வெளிநாட்டு அரசியற் களநிலையில் ஒரு முக்கிய நபராகக் கணிக்கப்பட்டவர். புலிகளுக்கு எதிரான அரசியல் நகர்வுகளில் பிரதானமாகப் பங்கேற்றவர்.

1996க்குப் பின்னர் லக்ஷ்மன் கதிர்காமர் செய்த மிகப்பெரிய சர்வதேசப் பிரசார யுத்தமும், உள்நாட்டில் அரசுப்படைகளால் மேற்கொள்ளப்பட்ட தொடர் போர் நடவடிக்கைகளும் புலிகளையும், தமிழ்மக்களையும் பெரும் நெருக்கடிக்குள் தள்ளியிருந்தன.

உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் தமிழ்மக்கள் மீது தொடுக்கப்பட்ட பெரும் நெருக்கடிகளுக்கும், அவலங்களுக்கும் இலங்கை அரசுக்குப் பெரும் துணையாக இருந்தவர் லக்ஷ்மன் கதிர்காமர். கதிர்காமரின் வெளிநாட்டுக்கொள்கை தோற்கடிக்கப்பட்டபோது - பொ.ஐ.மு. ஆட்சியும் தோல்வியடைந்தது.

இந்த நிலையில் - அரசியல் அரங்கிலிருந்து காணாமற்போயிருந்த கதிர்காமர், ஜனாதிபதியின் வெளிவிவகார ஆலோசகர் என்று, அரசியல் அரங்கினுள் மீண்டும் பிரவேசித்தார். இதுவரை அப்பதவியைப் பயன்படுத்தி அதேகளத்தில் இருந்து வருகிறார்.

ஆனால், இப்போது அவர் தமது வேலையை மெல்ல, மெல்ல மீண்டும் காட்டத்தொடங்கியிருக்கிறார். இவருக்கு இப்போது இந்தியர்தான் ஆலோசனை கூறுவதற்குக் கிடைத்திருக்கிறது.

அண்மையில் இந்தியாவுக்கு விஜயம் செய்த கதிர்காமர், இலங்கையில் ஏற்பட்டுவரும் அரசியல் மாற்றங்கள்- இந்தியாவுக்கு ஆபத்தானது என வலிந்து போய் விளக்கிக் கூறியிருக்கிறார்.

இவர் கூறிவரும் மாற்றங்கள்தான் என்ன? முதலாவது புலிகள் அரசியல் நிலையில் பலம் பெற்று வருவதைக் கதிர்காமரால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை. புலிகள் அரசியல், இராணுவ ரீதியாகப் பலம் பெற்று வருவது ஆபத்தானது என்பதை, கதிர்காமர் இந்தியாவுக்கு கூறியிருப்பது, அவரது அச்சநிலை வெளிப்படுவதையே காணக்கூடியதாகவுள்ளது.

முன்னரைப்போல புலிகளைப் பலவீனப்படுத்த தன்னால் முடியாது என்று உணர்ந்ததால்தான், அவர் இந்தியாவுக்கு மந்திரம் ஓதிப்பார்த்திருக்கிறார். புலிகள் வளர்ச்சி பெற்று, இந்தியாவைத் தாக்கிவிடுவார்கள் என்பது போல இவர் பிரமிப்பூட்டவும் தவறவில்லை.

அத்துடன், சண்டை தொடங்கினால், நான்கு நாட்களில் திருமலை விழுந்துவிடும், அதற்கேற்றவாறு புலிகள் முகாம்களை அமைத்து வருகின்றனர் என்றும் கதிர்காமர் எச்சரித்திருக்கிறார்.

திருமலை எண்ணெய் குதங்களை இந்தியா வைத்திருக்கும் நிலையில்தான், இந்த எச்சரிக்கையை கதிர்காமர் நாசூக்காகக் கொண்டு சென்றிருக்கிறார்.

சாத்தியமான எல்லா வழிவகைகளினூடாகவும் இந்தியாவைப் புலிகளுக்கு எதிராகத் திருப்பிவிடுவதே கதிர்காமரின் நோக்கமாகும். ஆனால், அவரது இந்திய விஜயத்தின் நோக்கம் நிறைவேறியதா என்றால் அதற்கும் பதில் இல்லையென்றே கூறவேண்டும்.

கதிர்காமரின் பேச்சு இந்தியாவில் அவ்வளவு எடுபட்டதாகத் தெரியவில்லை. இதனால் அவர் சலிப்படையத் தயாராகவில்லை. இடைக்கால நிர்வாகத்தைப் புலிகள் பெற்றுவிடக்கூடாது என்பதற்காகவே கதிர்காமர் இப்படிப்பட்ட வியூகத்தை வகுக்க முற்பட்டார்.

ஆனால், இந்தவிடயத்தில் ஊடகங்களில் ஏற்படுத்திய ஈர்ப்பின் அளவுக்கு, இந்திய அரசியல் மட்டத்தில் ஈர்ப்பு ஏற்படுத்த கதிர்காமரால் முடியவில்லை. காரணம் அவரது அரசியல் பிரசாரங்கள் இப்போது எடுபடுவதில்லை என்பதேயாகும்.

# தமிழீழத்தைக் கொடுக்காமல் பிரச்சினைகளைத் தீர்ப்போம்!

## அமைச்சர் மகிந்த விஜயசேகர தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழீழத்தைக் கொடுக்காமல் - பிரச்சினைகளைத் தீர்ப்போம். அதற்கு அரசிற்கு ஆதரவு வழங்கவேண்டும் என்று, கடற்றொழில், நீரியல்வள அமைச்சர் மகிந்த விஜேசேகர பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

நான் பொதுஜன ஐக்கிய முன்னணியில் இருந்து, ஐக்கிய தேசியக் கட்சிக்கு வந்தேன் என்பதால் எனது புரட்சிகர சிந்தனைகள் மாறவில்லை. பொதுஜன ஐக்கிய முன்னணியில் இருந்து எதற்காக ஐக்கிய தேசிய கட்சிக்கு வந்தேனோ, அக்குறிக்கோளுக்காவே தொடர்ந்தும் செயற்படுகிறேன்.

எனக்கும் பிரதமருக்கும் இடையில் எந்த விதமான முரண்பாடுகளும் இல்லை. பிரதமர் சமாதானத்தினை ஏற்படுத்தும் நோக்கில் உழைக்கின்றார். அவரது முயற்சிகளுக்கு நான் ஆதரவு அளிக்கிறேன். ஆனால், தமிழீழம் உருவாகாமல் பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும். அதற்குத் தான் நாம் ஆதரவு கொடுக்கவேண்டும். இந்த நாட்டில் வாழும் அனைத்து இனங்களும், ஆதரிக்கக்கூடிய தீர்வொன்றை பிரதமர் எடுப்பதற்கு தேவையான ஆதரவை வழங்கவேண்டும் என்றும் அவர் மேலும் கூறினார்.

சபையில் கொண்டுவந்த தனிநபர் பிரேரணை மீதான விவாதத்திற்குப் பதில் அளித்துப் பேசும்போதே, அமைச்சர் மகிந்த விஜேசேகர மேற்கண்டாவறு தெரிவித்தார்.

## தேர்தல் சீர்திருத்த ஆணைக்குழு; உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டனர்!

தேர்தல்முறை சீர்த்திருத்தம் தொடர்பாக, சபாநாயகர் தெரிவுக்குழு ஒன்றை நியமித்துள்ளார். இக்குழுவுக்கு நாடாளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்த்தன தலைமை வகிக்கின்றார்.

இக்குழுவின் உறுப்பினர்களாக - அமைச்சர்களான பெ. சந்திரசேகரன், கரு ஜயசூரிய, அமரா பியசீலி ரத்நாயக்கா, மகிந்த சமரசிங்க, ரவூப் ஹக்கீம் மற்றும் உறுப்பினர்களான ஆனந்த குமாரசிறி, சேகு இஸ்ஸதீன், டபிள்யு பி.எக்கநாயக்கா, கயிந்த கருணதிலக, ராஜா கொளுரே, நந்தன குணதிலக, நிமல் சிறிபால டி.சில்வா, டக்ளஸ் தேவானந்தா, சுனில் எககராயக்க, ரவீந்திர ரந்தெனியா, ஆர்.யோகராஜன், எஸ். சதாசிவம், இரா. சம்பந்தன் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

## வடக்கில் மிதிவெடிகளை அகற்ற ஜப்பானியக் குழுவும் வருகிறது!

(கொழும்பு)

வடக்கில் மிதிவெடிகளை அகற்றுவதற்கு - ஜப்பானியக் குழு, அடுத்தமாத முற்பகுதியில் இலங்கைக்கு வரவுள்ளது.

இவர்கள் வடக்கில் மிதிவெடிகளை அகற்றுவதோடு, புதியவர்களுக்கு மிதிவெடிகள் அகற்றுவது தொடர்பாக பயிற்சியளிக்கவுள்ளார்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இது சம்பந்தமாக - எரி சுசுகி, டிறாக்சும் ஆகிய நிபுணர்கள், கடந்த 19 ஆம் திகதி இலங்கைக்கு வந்து வவுனியா அரசாங்க அதிபரைச் சந்தித்துக் கலந்துரையாடினர்.

ஜப்பானிலிருந்து வரவிருக்கும் மிதிவெடிகள் அகற்றும் குழுவினர், இங்கு தங்கி இருப்பதற்குரிய அடிப்படை வசதிகள் பற்றியே வவுனியா அரசாங்க அதிபரோடு கலந்துரையாடியுள்ளனர்.

## மேல்மாகாண முதலமைச்சருக்கு எதிராக மேலும் ஒரு வழக்கு உயர் நீதிமன்றத்தில்!

மேல்மாகாண முதலமைச்சர் றெஜினோல்ட் குரேயைத் தொடர்ந்து முதலமைச்சர் பதவியில் இருப்பதற்கு தகுதியற்றவர் என்று பிரகடனப்படுத்துமாறு கோரி, உயர்நீதிமன்றத்தில் மேலும் ஒரு வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மினுவாங்கொட நகரசபை உறுப்பினர் நாலக ராஜபக்ஷவே இந்த மனுவைத் தாக்கல் செய்துள்ளார். றெஜினோல்ட் குரே பதவி வகிப்பதற்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்டுள்ள மூன்றாவது மனு இதுவாகும்.

மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி சபைகளுக்கு நடைபெற்ற தேர்தல்களில், வேட்பு மனுதாக்கல் செய்யாத ஒருவர் உறுப்பினராகப் பதவி வகிக்க முடியாது என, உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்திருப்பது குறிப்பிடத்தக்கது. இந்தத் தீர்ப்பை அடிப்படையாகக் கொண்டே இந்த மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

## புலிகளின் தலைமையில் இடைக்கால நிர்வாகம்; அமைக்குமாறு தொழிற்சங்கங்கள் கோரிக்கை!

(கொழும்பு)

புலிகளின் தலைமையில் வடக்கு - கிழக்கில் இடைக்கால நிர்வாகசபை உருவாக்க வேண்டும். அப்போதுதான், யுத்தத்தால் அழிவுண்ட பிரதேசங்களை இனங்கண்டு புனர்வாழ்வு, புனரமைப்பு வேலைகளை ஆரம்பிக்க முடியும்.

இவ்வாறு - இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் பிரதிநிதிகளிடம், இலங்கையிலுள்ள சில தொழிற்சங்க வாதிகள் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சந்திப்பு கொழும்பு பிரிட்டிஷ் கவுன்சில் மண்டபத்தில் இடம்பெற்றுள்ளது.

உதவி வழக்கும் நாடுகளின் பிரதிநிதியாக ஐ.எம்.எல்., ஜி.ரி.இசற், யு.என்.டி.பி., சீடா, டறிச் எம்பேசி ஆகிய அமைப்புக்கள் கலந்துகொண்டன. வடக்கு, தெற்கு மாகாண பொது அமைப்புக்களின் ஒன்றியத்தின் சார்பாக மூத்த தொழிற்சங்கவாதிகள் மூவர் கலந்துகொண்டனர்.

இலங்கைத் தமிழ் ஆசிரிய சங்கத்தின் செயலாளர் த.மகாசிவம், பசுமை இயக்க இணைப்பாளர் கரஞ்சன் கொடிதுவக்கு, 200 பெண்கள் அமைப்புக்களின் இணைப்பாளர் திருமதி குளோறியா ஆகியோர் கலந்துகொண்டு தமது கருத்துக்களைக் கூறினர்.

வடக்கு, தெற்கு தொழிற்சங்கவாதிகளின் ஒன்றியம் தயாரித்த "இலங்கையை மீளக் கட்டியெழுப்புவதற்கான மக்களின் உணர்வலைகள்" என்ற அறிக்கையை உதவி வழங்கும் நாடுகளின் பிரதிநிதிகளிடம் கையளித்தனர்.

இவ்வறிக்கையை வாசித்த பிரதிநிதிகள் - முழுத் திருப்தி அடைந்ததுடன் இலங்கை அரசாங்கம் தயாரித்த அறிக்கையில் உள்ள குறைபாடுகளையும் சுட்டிக்காட்டினார்கள்.

இனிமேல் இலங்கைக்கு நிதி உதவி வழங்கும் போது, இவ்வறிக்கை நிச்சயம் கவனத்தில் கொள்ளப்படும் என்று பிரதிநிதிகள் உறுதியளித்தனர்.

## சேவைக்கால ஆலோசகர்களுக்கு விசேட கொடுப்பனவு அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

செப்ரெம்பர் மாதம் முதலாம் திகதி தொடக்கம் - சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்களின் மாதாந்த விசேட கொடுப்பனவு, ஆயிரம் ரூபாவாக அதிகரிக்கப்படவுள்ளது. இவ்வாறு மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் வீ.இராசையா அறிவித்துள்ளார்.

வடக்கு - கிழக்கு மாகாணம் தவிர்ந்த ஏனைய மாகாண ஆசிரிய ஆலோசகர்களுக்கு மாதாந்த விசேட கொடுப்பனவாக ஆயிரம் ரூபா வழங்கப்பட்டு வந்தது. ஆனால் வடக்கு - கிழக்குப் பகுதியில் கடமையாற்றும் ஆசிரிய ஆலோசகர்களுக்கு இதுவரை காலமும், ஐந்நூறு ரூபா மாத்திரமே கொடுப்பனவாக வழங்கப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை ஆசிரிய ஆலோசகர்களின் பாவனைக்கு வருடாந்தம் 500 ரூபாவுக்கான காகிதாதிகள் வழங்கப்படவுள்ளதாகவும், மாகாணக் கல்வித் திணைக்களம் அறிவித்துள்ளது.

ஆசிரிய ஆலோசகர்கள் மாதாந்தம் சென்று கவனிக்க வேண்டிய பாடசாலைகளின் எண்ணிக்கையும், பத்தில் இருந்து எட்டாகக் குறைக்கப்பட்டுள்ளது.

வலயக் கல்விப் பணிப்பாளர்களால் பணிக்கப்படும் கல்வி அபிவிருத்தி நடவடிக்கைகளில், ஆசிரிய ஆலோசகர்கள் குறித்த மாதத்தில் மேலதிகமாக இரு நாட்கள் ஈடுபடவேண்டும் எனவும் மாகாணத் திணைக்களம் அறிவித்துள்ளது.

## யாழ். பல்கலைக்கழக வாயில்களில் பறந்துகொண்டிருக்கும் கறுப்புக்கொடிகள்

(யாழ்ப்பாணம்)

நாடு முழுவதிலுமுள்ள பல்கலைக்கழகங்களின் கல்விசாரா ஊழியர்களால் நடத்தப்பட்டு வரும் வேலை நிறுத்தப் போராட்டத்தை முன்னிட்டு, யாழ்.பல்கலைக்கழக வாயில்களில் கறுப்புக் கொடிகள் பறக்கவிடப்பட்டுள்ளன.

கடந்த பல நாட்களாக, பல்கலைக்கழகங்களில் கல்விசாரா ஊழியர்கள், சில கோரிக்கைகளை முன்வைத்துத் தொடர்ச்சியாக வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## மீண்டும் இந்தியப் படைகளை இங்கு கொண்டுவரவேண்டும்!

### டக்ளஸ் கோருகிறார்

மீண்டும் இந்தியப் படைகளை - இலங்கைக்கு கொண்டு வந்து விடுதலைப் புலிகளின் வன்செயல்களைக் கட்டுப்படுத்துங்கள்.

இவ்வாறு - ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா, இந்திய உயர்ஸ்தானிகர் நிருபம் சென்னிடம் வேண்டுகோள் விடுத்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

அண்மையில் இடம்பெற்ற ஜி.எஸ்.பீரிஸின் பிறந்த தின வைபவத்துக்கு வருகைதந்திருந்த இந்திய உயர்ஸ்தானிகரிடமே இந்த வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

அதற்கு நிருபம் சென் தெரிவிக்கையில், எங்கள் நாட்டில் வேண்டியளவு யுத்தங்கள் இடம்பெற்று வருகின்றன. அதற்கெதிராக நடவடிக்கைகள் எடுத்து களைத்து விடுகிறோம். எங்கள் படை இங்கு வருவதாக இருந்தால், இந்த நாட்டு அரசு அழைப்பு விடுக்கவேண்டும் என்று கூறியதாக, சிங்களப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

# ஜே.வி.பியுடனான கூட்டணி அமைத்து தேர்தலை நடத்த தயாராகும் சந்திரிகா

## தெற்குத் திசையினிலே...

**கொழும்பிலிருந்து இந்திரஜித்**

வடக்கு - கிழக்கு தொடர்ந்தும் இணைக்கப் படக்கூடாது. பிரிக்கப்படவேண்டும் என்ற கோஷம் எதிர்க்கட்சிகள் தரப்பில் ஓங்கி எழுப் பப்படும் ஆசையாக உருவெடுத்துள்ளது. வடக்கு - கிழக்கு தமிழர்களின் தயாகம்



என்பதில் இருந்தே, தமிழ்மக்களின் உரிமைப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டு, அந்த உரிமைப் போராட்டம் ஆரம்பத்தில் சிங்கள பேரினவா திகளால், கொச்சைப்படுத்தப்பட்டதன் விளைவே, இன்று சர்வதேசம் இந்த தாயகக் கொள்கையை ஏற்றுக்கொள்ள வழிவகுத்துள் ளது. சர்வதேசத்தின் முன்னால் - இலங்கை யின் அரசாங்கங்கள், தமிழர்களின் போராட் டங்களைத் திரிபுபடுத்திக் காட்டியிருந்தன. ஆரம்பத்தில் இது நியாயமில்லா போராட் டம், ஆயுதம் ஏந்திப் போராடுபவர்கள் பயங்கர வாதிகள் என்ற பிரசாரங்களை, இலங்கை அரசாங்கம் உரியவகையில் கொண்டுசென் றது. அதில் வெற்றியும் பெற்றது.

அந்த வெற்றியை அரசாங்கங்களால் தக்க வைத்துக்கொள்ள முடியவில்லை. உண்மைப் போராட்டத்தின் முன்னால் இலங்கை அரசாங்கங் களின் மாயத்திரை கிழித்தெறியபபட்டது. நியா யப் போராட்டத்தின் வடிவத்தை சர்வதேசம் உணர்ந்தது. தமிழர்களுக்கும் பிரச்சினை இருக்கிறது, அது தீர்க்கப்படவேண்டும் என அந்த சர்வதேசம் கூறியது. ஆனால் அதே சர்வதேசம் இலங்கையின் இனப்பிரச்சினையை தமது நாடுகளின் செல்வாக்குகளுக்குப் பயன் படுத்தும் வழியாக இன்று பயன்படுத்தி வருகி ன்றன.

இந்தியா - இலங்கையின் அண்டை நாடு, வம்சாவளி மக்களைக் கொண்ட நாடு, போராளிக ளுக்கு உதவிய நாடு என்ற அடிப்படையில் இலங்கை இனப்பிரச்சினைத் தீர்வில் தலை




யிட்டது. 1987 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் அது இலங்கை இனப்பிரச்சினைக்குத் தாமே முன்னின்று தீர்வு ஒன்றைச் செயற்படுத்த முனைந்தது. அதனால், மாகாணசபையின் மூலம் அதிகாரத்தைப் பகிரலாகும். ஆனால், அதிகாரத்தை பகிரல் என்ற அம்சங்கள் நியா யப் போக்கைக் கொண்டிருக்கவில்லை. போராட்டம் எதற்கென ஆரம்பிக்கப்பட்டதோ, அதன் நோக்கங்களைச் சிதறடிக்கும் வகை யில் இந்த மாகாணசபை திட்டம் முன் வைக்கப்பட்டிருந்தது. அதிகாரப்பகிரல் என்ற விடயங்களில், வெறும் பேச்சுக்கு மாத்திரமே என்ற அளவில் இந்தத் தீர்வில் உள்ளடக்கப் பட்டிருந்ததாகவே தமிழீழ விடுதலைப்புலிகள் குறிப்பிட்டனர். இதன் காரணமாக அவர்கள் அந்த தீர்வை நிராகரித்தனர். ஆரம்பத்தில் தமிழீழ விடுதலைப்புலிகளின் நிலைப்பாட்டை விமர்சித்த ஏனைய தமிழ் கட்சிகளும்கூடப் பின்னர் வந்த காலப்பகுதிகளில், மாகாண சபைத் திட்டத்தில் ஒன்றும் இல்லை என்ற முடிவுக்கு வந்தன. ஆனால், தமிழீழ விடுதலைப

புலிகளைப் போல மீண்டும் ஒரு நியாயப் போரா டத்தை நடத்த அந்தத் தமிழககட்சிகளால முடிய வில்லை. மகாணசபை திட்டம் தனித் தமிழீழம் வழங்கப்படுவதற்கு சமனான தீர்வாகும் என அன்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும், மக்கள் விடுதலை முன்னணியும் போர்க்கொடியைத் தூக்கிநின்றன. ஆனால், அதேகட்சிகள பின்னர் தமது நிலைப்பாட்டை மாற்றிக்கொண்டன. மாகா ணசபைத் தேர்தல்களில் பங்குபற்றி, அந்த மாகாணசபைகளில் சிலவற்றின் நிர்வாகங் களையும் அவை தன்னகத்தே கொண்டுள்ளன.

இது எதனை காட்டுகிறது. மாகாணசபைத் தீர்வு தமிழ்மக்களின் பிரச்சினையைத் தீர்த்து விட்டது. அதனை ஏற்றுக்கொளவோமென அவை நினைத்தனவா? எனப் பார்த்தால் இல்லை என்றே பதிலளிக்கவேண்டும். மாகாணசபைத் தீர்வானது - தாம் எதிர்பார்த்ததைப் போன்று, நாட்டைப் பிரிக்கக்கூடிய தர்வல்ல, அதிகார மற்ற தீர்வே என இந்தக் கட்சிகள் முடிவெடுத் தன. அதனடிப்படையிலேயே அந்த மாகாண சபைத் தீர்வுத் திட்டங்களை ஏற்றுக்கொண்டன. இந்த நிலையில், இன்று மாகாணசபை தீர்வுக்கு மேலாக ஒரு அதிகாரப்பரவலாக்கல் தன்மை தமிழர்களுக்கு வழங்கப்படுமானால், அது தனி நாட்டுக்கு வழிவகுத்து விடுமெனத் தென்னி லங்கையின் சிங்களக் கட்சிகள் எண்ணம் கொண்டுள்ளன. எனவேதான் அவ்வாறான தீர்வு ஒனறை அக்கட்சிகள் எதிர்க்கின்றன.

"சமஷ்டி" என இன்று ஏற்றுக்கொள்ளப்பட் டுள்ள தீர்வுத் திட்டத்தை, தென்னிலங்கையில் கட்சிகள் - தனி நாட்டுக்குரிய அதிகாரம் என்ற அளவில் பார்க்கின்றன. எனவேதான், அது வழங்கப்பட்டுவிடக்கூடாது என அவை உரைத்துநிற்கின்றன. இந்தக் கட்சிகளைப் பொறுத்தமட்டில், தமது கொள்கைகளின் அடிப்ப டையில் சமஷடி அல்லது கூடிய அதிகார தீர்வை எதிர்க்கின்றன என்பது கேள்விக்குரிய விடயமே! ஆனால், ஏதோ ஒரு வெளிநாட்டுச் சக்திகளின் உந்துதல்கள்- இந்த கட்சிகளின் எதிர்ப்புப் போக்கிற்குப் பிணபலமாக இருக்கின்றன என்பது சாதாரண பொதுமகன் ஒருவனின் எண்ணத்தில்கூட கருத்தாக இன்று எழுந்துள் ளது. இந்த பின்பலம் எனச் சொல்லக்கூடிய நாடுகள் இலங்கை அரசியற்தீர்வு ஒன்று முன்மாதிரியான முறையில் காணப்பட்டு, இது குடிமக்களின் மத்தியில பிரச்சினைகளைத் தோற்றுவித்துவிடுமோ? என அச்சம்கொண்டுள் ளன. இதன் காரணமாக அந்த நாடுகளின் பல்வேறு கார ணங்களைக்கூறி இலங்கையின் இனப்பிரச்சி னைத் தீர்வுக்கு முட்டுக்கட்டையை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றன. மறுபுறத்தில் சில நாடுகள் - சமஷ்டி முறையிலாவது இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படவேண் டுமென நினைக்கின்றன. நல்லெண்ணம் அல்

லது தமிழ்மக்களின் மீது அனுதாபம் என்ப வற்றின் அடிப்படையிலேயே, இந்த நாடுகள் இவ்வாறு நினைக்கின்றன என எண்ணுவது தவறு.

அவை தமது நாட்டு நலனுக்காக அதா வது- போர்த்தளபாடங்கள், தளம் மற்றும் வர்த் தகம் முதலானவற்றுக்கும் இலங்கையைப் பயன்படுத்திக் கொள்ளப் பார்க்கின்றன. அதன் வழியிலேயே சமாதான முன்னெடுப்பில் தாமும இணைபவர்கள் என அவை காட்டிக்கொள் கின்றன. அமெரிக்கா, ஜப்பான் போன்ற நாடு கள் இதன் பாற்பட்டவையே. நோர்வேயை பொறுத்தவரையில் - அந்த நாடு சமாதான முனைப்புகளில் ஏற்கனவே தீவிரம் காட்டி வந்த நாடு என்பதில் சந்தேகமில்லை. ஆனால், அண்மைக் காலப்போக்கில் அது - அமெரிக் காவுடன் சில விடயங்களில் இணைந்து செயற் படுகின்றமை, குறிப்பிடத்தக்கது.

இலங்கையின் இனப்பிரச்சனைத் தீர்வு முயற்சியில - ஐக்கிய தேசிய கட்சி ஆட்சிக்கு வருவதற்கு முன்னர், நோர்வே - அமெரிக்கா

விடம் சில ஆலோசனைகளைப் பெற்றுக்கொண் டமை அனைவரும் அறிந்த உண்மை. இதற்கு நோர்வே நாட்டைக் குறைகூறமுடியாது. அமெ ரிக்க ஏகாதிபத்திய வீச்சுத்திறனின ஒரு அங் கமே இதுவென கொள்ளலாம். இதுவரை இனப்பிரச்சினைத் தீர்வில் இதுவரையிலுமான நிலைமைகள் தொடர்பான சிறிய கண்ணோட் டம் ஒன்றைப் பார்த்தோம். இனி தற்போதைய சமாதான நிலை சம்பந்தமாக தென்னிலங்கை கண்ணோட்டம் ஒன்றைச் செலுத்திப்பார்ப் போம். இடைக்கால நிர்வாகம் சம்பந்தமாக, பாரிஸில் தமிழீழ விடுதலைப் புலிகள் கலந்து ரையாடிக் கொண்டிருக்கின்றனர். எனினும் தென்னிலங்கையில் - இனப்பிரச்சினைத்தீர்வு விடயத்தின் இதயப்பகுதியில், அரசியல் நடத் தப்படுகிறது. தமிழ்க்கட்சிகளும் அதற்குப் பின் னர் தமிழ் இயக்கங்களும், அன்றுமுதல் வடக்கு- கிழக்கு இணைப்பை வலியுறுத்தி வருகின்றனர். அதாவது, வடக்கு - கிழக்கு தமிழர்களின் தாயக பூமி என்ற கோட்பாட்டை, தமக்குள்ளே முரண்பாடுகளைக் கொண்டிருக்கின்ற இயக் கங்ளும், முஸ்லிம் அமைப்புக்களும் ஏற்றுக் கொண்டிருக்கின்றன. எனினும், கிழக்கில் அமைச்சர் அதாவுல்லா - வடக்கில் இருந்து கிழக்குப் பிரிக்கப்படவேண்டும் எனக் கோரி வருகின்றார். இவரின் கோரிக்கை கிழக்கில் சங்கட நிலைமையை ஏற்படுத்தியுள்ளது.

மறுபுறத்தில் கிழக்கில் வாழும் சில முஸ் லிம் இளைஞர்கள் - அமைச்சர் அதாவுல்லா வின் கோரிக்கையை வரவேற்றுள்ளனர். தமிழ் மக்களுக்கு வழங்கப்படும் அதே உரிமைகள்- தமக்கும் வழங்கப்படவேண்டும் எனக் கோரும் இந்த இளைஞர்களில் சிலர், ஆயுதப் பயிற்சி



களை மேற்கொண்டிருப்பதாக அண்மையில் ஆங்கில ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டி ருந்தது. இதில் எந்தளவு உண்மை இருக்கி றதோ? என்பதை ஊகிக்க முடியவில்லை. ஆனால், அவ்வாறான தீவிரவாதப் போக்கு ஒன்றுக்கு, அதாவது தமிழர்களுக்கு எதிராகப் போராடவேண்டும் என்ற நிலைப்பாடு, அரசியல் தலைமைகளால் - இளைஞர்களை வழிப்படுத் திச் சென்றுள்ளன என்பதே உண்மை. கடந்த கால சம்பவங்களில் இரண்டு தரப்பிலும் வடுக் களை ஏற்படுத்தியது உண்மையே. கிழக்கில்- தமிழர்களும், முஸ்லிம்களும் மாறிமாறி கொலை செய்யப்பட்டனர்.

இந்தநிலையில், கிழக்கில் வாழ்கின்ற தமிழ் - முஸ்லிம் மக்கள், தமக்குள் புரிந்து ணர்வைப் படிப்படியாகவே ஏற்படுத்திக்கொண்ட நிகழ்வுகள், அண்மைக் காலங்களில் இடம் பெற்று வந்தன. அதேநேரம் இருதப்புக்க ளுக்கு மத்தியிலும் மோதல்களும் இடம் பெற்று வந்துள்ளன. இதில், முக்கிய பங்கைச் சில அரசியல்வாதிகளே வகித்தனர் என்பது அனைவரினதும் கருத்தாக இருக்கிறது. தற் சமயம் அங்கு ஏற்பட்டுள்ள விரும்பத்தகாத நிலைமையும், இதனையே சுட்டிநிற்கிறது.

மத்திய அரசியலில் இந்தக் கிழக்கு மாகா ணப் பிரச்சினை - எவ்வாறு எடுத்தாளப்படு கிறது எனப்பார்ப்போம். கிழக்கு மாகாணத்தில் பிரச்சினைகள் இருக்கின்றன. அவற்றைத் தீர்த்து வைப்போம் என, அரசாங்கத் தரப்பு ஒருவாறு முயற்சிகளை எடுத்து வருகிறது. ஆனால், எதிர்க்கட்சித் தலைவியான ஜனா திபதி சந்திரிகா பண்டாரநாயக்கவும், அவரின் கட்சியினரும் இந்தப் பிரச்சினைகளுக்குத் தூபம் இடும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள் ளனர். கிழக்கில் எந்த ஒரு சம்பவம் இடம் பெற்றாலும், ஜனாதிபதியும் அவரது கட்சி யினரும் அது, தமிழீழ விடுதலைப் புலிகளின்

வேலையே எனத் தமக்குத் தாமே உறுதிப்ப டுத்திக் கொள்கின்றனராம்.

இவ்வாறு ஒருநிலையை எடுப்பதன்மூலம், கிழக்கு மாகாண முஸ்லிம் மக்களின் இரட் சகர் என்பதை அவர் வெளிக்காட்டிக் கொள்ள



முனைவதாகவே, அரசியல் வட்டாரங்களில் கருத்துக்கள் வெளியிடப்பட்டுள்ளன. அதே நேரம், கிழக்கில் - தமிழீழ விடுதலைப் புலி கள், அனைத்து முஸ்லிம்களுக்கும் எதிரான வர்கள் என்ற போக்கில், ஜனாதிபதி - தமது கருத்துக்களை வெளியிட்டு வருகிறார். அதற்கூடாக- அங்குள்ள முஸ்லிம் மக்களின் வாக்குகளைத் தமக்கு வாவமைக்கக்கொள் ளலாமென, அவர் எண்ணுகிறார்.

அதேநேரம், அந்த மக்களின் பிரதிநிதிக ளைத் தம் வசம் ஈர்த்து, அடுத்த ஆட்சியைக் கைப்பற்றுவதே, ஜனாதிபதியின் முழுமை யான திட்டமாகும்.

அரசியல் மற்றும் இனப்பிரச்சினை விடயங் களிலிருந்து, சற்றுத் தேர்தல் முனைப்புக் களத் தினை எட்டிப்பார்த்தால் - அங்கு பாரிய ஏற்பா டுகள் இடம்பெற்றுக்கொண்டிருக்கின்றன. பொதுஜன ஐக்கிய முன்னணியும், மக்கள் விடுதலை முன்னணியும் இணைந்து - அடுத்த ஆட்சியைக் கைப்பற்றுவதற்கு வியூகம் வகுத் துக் கொண்டிருக்கின்றன.

விரைவில் மாகாணசபைத் தேர்தல்கள் நடாத்தப்படும் என ஜனாதிபதி கூறியுள்ளார். இதற்கான நடவடிக்கைகளிலும் அவர் ஈடுபட்டு வருகிறார். பெரும்பாலும் எதிர்வரும் 4 மாத காலப் பகுதிக்குள் மாகாணசபை தேர்தல்கள் நடத்தப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. ஆனால், மகாணசபை தேர்தல் என்ற பிரசார போர்வையில், பொதுத்தோர்தல் ஒன்று நடாத் தப்படும் வாய்ப்புக் குறித்தும் அதிகமாகவே பேசப்பட்டுவருகிறது.

ஜனாதிபதி இதில் வெற்றிபெறுவதற்கு - மக்கள் விடுதலை முன்னணியை நம்பியுள் ளார். இறுதியாக நடைபெற்ற கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தில் அவர் இதனை உறுதிசெய் துள்ளார்.

மக்கள் விடுதலை முன்னணியுடன் கூட்ட ணியை ஏற்படுத்தியபின்னர், தேர்தல் நடாத் தப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார். தாம் ஆட்சி அமைக்கும் அல்லது அதற்கு தயாராகும் பட்சத்தில், ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து 12 நாடாளுமன்ற உறுப்பினர்கள் தம்முடன் இணைவார்கள் எனவும் அவர் தெரிவித்துள் ளார். அரசாங்கத்தை பொறுத்தவரையில் தேர்தல் ஒன்றுக்கு முகங்கொடுப்பது எவ்வாறு என்பது குறித்து விரிவாக ஆராயப்படும்.

பாதுகாப்பு தரப்பில் இருந்து ஒரு தகவல்- இலங்கையின் கடற்படை நீண்டதூர துப்பாக் கிகளைக் கொள்வனவு செய்யும் முயற்சி நடந்துள்ளமை அனைவரும் அறிந்த விடயம். இதனடிப்படையில், அமெரிக்காவிலிருந்து 50 துப்பாக்கிகள் கொள்வனவு செய்யப்படவிருக் கின்றது. இதில் 15 இற்கு ஏற்கனவே ஒப்புதல் கிடைத்துள்ளது. இந்த ஒப்புதல் குறித்து கடந்த அமைச்சரவை கூட்டத்தில் - அமைச்சர் ராஜித சேனாரட்ன பிரச்சினையை எழுப்பி யுள்ளார்.

அரசாங்கம் இஸ்ரேலிடம் இருந்து இந்த நீண்ட தூரத் துப்பாக்கிகளை கொள்முதல் செய் வது நல்லது. அவையே இலங்கையின் கடற் படை கலங்களுக்குப் பொருத்தமானவை எனக குறிப்பிட்டுள்ளார்.

இதற்கு உடன்படாத பிரதமர் - இது தொடர பில் குழு ஒன்றை நியமித்து, முடிவைக் காண்போம் எனக் கூறியதாக அமைச்சரவை யிலிருந்து கிடைத்த தகவல்கள் தெரிவிக்கின் றன.

## இஸ்லாமியத் தீவிரவாதிகளால்

# மும்பாயில் குண்டுத் தாக்குதல்; 50 பேர் ஸ்தலத்தில் மரணம்!

(மும்பாய்)

இந்தியாவின் பொருளாதாரத் தலைநகர் என்றழைக்கப்படும் மும்பாய் நகரில், நேற்று நடைபெற்ற இரண்டு குண்டுத் தாக்குதல்களில், 50 பொதுமக்கள் கொல்லப்பட்டதுடன் நூற்றுக்கு மேற்பட்டோர் படுகாயமடைந்தனர்.

மும்பாய் நகரில், உல்லாசப் பிரயாணிகள் மத்தியில் பிரசித்தி பெற்ற மும்பாய் தேவி கோயிலுக்கு அருகில் இக்குண்டுத்தாக்குதல் நடைபெற்றதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இத்தாக்குதலால், அருகில் உள்ள கட்டடங்களும் மின்கம்பங்களும் சேதமடைந்துள்ளதாகவும், அக்கட்டடங்களில் குடியிருந்தவர்கள் திகிலுடன் உறவினர்களைத் தேடியதாகவும், குண்டு வெடித்தபோது கட்டடங்களில் இருந்தவர்கள் அருகில் இருந்த கடலுக்குள் தூக்கிவீசப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.



அயோத்தியில் இந்து, முஸ்லிம் ஆலயங்கள் அமைப்பது தொடர்பான அறிக்கை அண்மையில் வெளியிடப்பட்டபின்னர், இத்தாக்குதல் நடைபெற்றிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இந்தக் குண்டுத்தாக்குதல்களில் பாகிஸ்தானின் இஸ்லாமிய தீவிரவாதக் குழுவான .'லஸ்கார் ஈ தொய்பா' என்ற அமைப்பே நடத்தியிருக்கலாம் என்று மும்பாய் பொலீஸ் வட்டாரங்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது.


## ஈராக்கில் செஞ்சிலுவைச் சங்க அங்கத்தவர் தொகை குறைப்பு

ஈராக்கில் இயங்கும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம், தங்கள் மீதும் தாக்குதல் தொடரக்கூடும் என்ற அச்சத்தில் தமது செயற்பாடுகளை குறைத்துக்கொள்ளத் திட்டமிட்டுள்ளது.

அமெரிக்கப்படைகள் போதிய பாதுகாப்பை செஞ்சிலுவைச் சங்கத்திற்கு வழங்க முடியாதிருப்பதால் ஈராக்கில் உள்ள செஞ்சிலுவைச் சங்கம் தமது எண்ணிக்கையை 50 ஆக குறைப்பதற்குத் தீர்மானித்துள்ளது என, செஞ்சிலுவைச் சங்க அதிகாரி நடலாமனி தெரிவித்துள்ளார்.

உலகவலம்

இதுவரை தமது இரண்டு ஊழியர்களை இழந்துவிட்டதாகவும், தம் மீது தாக்குதல் தொடர்ந்தால் மேலும் ஈராக்கில் சேவைபுரியும் ஊழியர்களைக் குறைத்துக்கொள்ள நேரிடலாம் எனவும், செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.



ஈராக்கில் செஞ்சிலுவைச்சங்கம்- வைத்தியசாலைகளுக்கு மருத்துவ உபகரணங்கள் மருந்துவகைகள் ஆகியவற்றை வழங்குவதிலும் அமெரிக்கப்படையினரால் கைதுசெய்யப்பட்டவர்களைச் சென்று பார்வையிடுவதிலும், போர்க்காலத்தில் காணாமற்போனவர்களைத் தேடிக்கண்டு பிடிப்பதிலும் முழுமையாக செயற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.


## சிறுவிளம்பரம்

### தட்டச்சு வகுப்புக்கள்

தமிழ், ஆங்கில தட்டெழுத்து வகுப்புக்கள் புதிய பிரிவு ஆரம்பம் 28-08-2003.

தொடர்பு- N.S.T.C.A, 8/1 அம்மன் வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். (சி-1377)


# காஸாவில் எறிகணை தாக்குதல்; நான்கு ஹமாஸ் தீவிரவாதிகள் பலி!

இஸ்ரேலின் உலங்கு வானூர்தி ஒன்று, காஸா பகுதியில் நடத்திய குண்டுத்தாக்குதலில் ஹமாஸ் தீவிரவாதக் குழுவைச் சேர்ந்த நான்கு அங்கத்தவர்கள் கொல்லப்பட்டதாகவும் -

காஸா நகரின் தீவிரவாதக் குழுத்தலைவர் அகமட் சிரீவை குறிவைத்தே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இஸ்ரேல் பிரதேசங்களில் நடத்தப்படும் குண்டுத் தாக்குதல்களுக்கு அகமட் சிரீவே பொறுப்பாகச் செயற்பட்டதாக பலஸ்தீனிய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை - இஸ்ரேல் மக்கள் மீது தாக்குதல் நடத்தும் ஹமாஸ் தீவிரவாதிகளை முற்றாக அழித்து விடுவதென, இஸ்ரேல் அறிவித்துள்ளது.

ஆனால், இஸ்ரேல் அரசுக்கு மீண்டும் சமாதானப் பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பதில் நாட்டமில்லையென்பது அவர்களின் தொடரும் தாக்குதல்களில் இருந்து தெரிகின்றதென பலஸ்தீன அமைச்சர் ஒருவர் ஞாயிற்றுக்கிழமை தெரிவித்தார்.




கடந்த வியாழக்கிழமை நடத்தப்பட்ட ஹெலித் தாக்குதலில் ஹமாஸ் தலைவர் அபு சனிப் காஸாவில் கொல்லப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.


ராஜா யாழ்ப்பாணம்.

28 ஆம் திகதி வரை

விஜயகாந், கிரண், விவேக் நடித்த

தென்னவன்

காட்சிநேரம் 10.30, 2.30, 6.30 (பு.நே)

29 ஆம் திகதி முதல்

பாய்ஸ்

(சி-1284)

நிறஞ்சனாஸ் சங்கானை

ஸ்ரீகாந், த்ரிஷா நடித்த

மனசெல்லாம்

காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)

வெள்ளி, சனி, ஞாயிறு தினங்களில் மட்டும்

JUDGE AND JURY

இரவுக் காட்சி. 8.45 (பு.நே)

(சி-1285)

சுற்றுலாப் பயணிகளின் தங்குமிட வசதி

பருத்தித்துறை வீதி, நல்லூர்ச் சூழலில் யாழ். மநாகர சபைக்கு அருகாமையில் பாதுகாப்பும் சௌகரியமும்மிக்க சௌபாக்கியா இன் சுற்றுலாப் பயணிகள் த்ங்குவதற்குரிய குளியலறையுடன் கூடிய மற்றும் தனியான அறைகள் கொண்ட தங்குமிட வசதி அமைந்துள்ளது. சுற்றுலாப் பயணிகளின் வசதி கருதி சொகுசு வான் சேவையும் உண்டு.

தொலைபேசி, பக்ஸ் வசதிகள் கொண்டது.

சௌபாக்கியா இன்

772, 1st Floor,
பருத்தித்துறை வீதி, நல்லூர்,
யாழ்ப்பாணம்.

T.P. 021 -2225537
Fax - 0094 - 21 - 2225640

(சி-1406)

நடனமுருகன் ஏஜென்சி

- விமானப் பயணச் சீட்டுக்கள் பதிவுசெய்தல்
- உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு தபால் பொதிகள் அனுப்புதல்.
- தொலைத்தொடர்பு சேவை

உள்நாட்டு வெளிநாட்டு தொலைபேசி அழைப்புகள்
இன்ரநெற் அழைப்புகள்
Fax
தொலைபேசி அட்டைகள்
Dialog Kit அட்டைகள்
Mobitel More அட்டைகள்
Srilanka Telecom Internet அட்டைகள்
Lanka Internet அட்டைகள்
Lanka Voice Line அட்டைகள்

- குறைந்த கட்டணத்தில் மேசை தொலைபேசி கையடக்க தொலைபேசியில் I.D.D அழைப்புகளை மேற்கொள்வதற்கான தொலைபேசி அட்டைகள் மற்றும் கையடக்க தொலைபேசிகளும் அதன் உதிரிப்பாகங்களும் விற்பனைக்குண்டு.
- கொழும்பு - யாழ். பஸ், வான் சேவைகள், யாழ் - கொழும்பு கல்யாண மண்டபங்களுக்கான ஒழுங்குகளை மேற்கொள்வோர்.

நீங்கள் நாடவேண்டிய இடம்

நடனமுருகன் ஏஜென்சி

772, பருத்தித்துறை வீதி,
நல்லூர்.

T.P.021 -2225537
021 - 222 5640
Fax - 021 - 2225640

(சி-1405)


## அரசாங்க அறிவித்தல்

### கூறுவிலை கோருதல்

மனிதவள மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டம் தொடர்பாக, பின்வரும் பொருட்களைக் கொள்வனவு செய்வதற்கு இப்பொருட்களை விற்பனை செய்யும் நிறுவனங்களிடமிருந்து கூறுவிலைகள் கோரப்படுகின்றன.

| பொருட்களின் பெயர் | தொகை |
|---|---|
| *01. Ribbon (LQ-300+)* | *24 Nos.* |
| *02. Filter Glass 14"* | *20 Nos.* |
| *03. Scanner $A^4$ (Canon)* | *10 Nos.* |
| *Scanner $A^3$ (Canon)* | *01 No.* |
| *04. Marker (Temporary) - Black, Green, Red, Blue* | *54 Nos.* |
| *05. Rug (1 1/2 X 2 1/2 Rubber)* | *10 Nos.* |
| *06. Digital Camera (Sony) (Snipe & Video with floppy & Ram Drive 120 MB)* | *01 No.* |
| *07. Ram Drive USB Port - 120 MB* | *01 No.* |
| *08. External DVD Writer 16X (Sony)* | *01 No.* |
| *Internal Cd Writer 52X (Sony)* | *10 Nos.* |
| *09. Overhead Projector (Elmo - Portable)* | *01 No.* |
| *10. Laptop P4 (Campack 15" Visual with Floppy Drive & Cd Rom)* | *01 No.* |
| *11. Cloth Dust Cover* | *(50 Meters)* |

2. கூறுவிலைகளைச் சமர்ப்பிக்க விரும்பும் வியாபார நிறுவனங்கள் மீளளிக்க முடியாத கேள்வி வைப்பாக ரூபா.500.00 இனை யாழ்.மாவட்ட புனர்வாழ்வு, புனரமைப்புச் செயலகத்தில் செலுத்திக் கூறுவிலைப்படிவங்களை 2003.08.26ஆம் திகதி தொடக்கம் 2003.09.01 ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் அலுவலக நாட்களில் மு.ப.10.00 மணி தொடக்கம் பி.ப.3.00 மணி வரை பெற்றுக்கொள்ளலாம்.
3. கூறுவிலைகளைச் சமர்ப்பிக்க விரும்பும் வியாபார நிறுவனங்கள் மீளளிக்கக்கூடிய கேள்வி வைப்பாக ரூபா.5000.00 ஐ யாழ்.மாவட்டப் புனர்வாழ்வு, புனரமைப்பு செயலகத்தில் செலுத்தி பற்றுச்சீட்டின் பிரதியை கூறுவிலை கோருதல் விண்ணப்பத்துடன் இணைத்தல் வேண்டும்.
4. பூரணப்படுத்தப்பட்ட கூறுவிலைப்பட்டியலை இரு பிரதிகளில் தலைவர், மாவட்ட கேள்விச்சபை, மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம் (அரசாங்க அதிபர், யாழ்ப்பாணம்) என முகவரியிடப்பட்ட நீளத்தபால் உறையில் நேரடியாகவோ, தபால் மூலமாகவோ யாழ்.செயலக மாவட்டப் புனர்வாழ்வு, புனரமைப்புச் செயலக (கணக்காளரது) அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் 2003.09.01 ஆம் திகதி பி.ப.2.00 மணிக்கு முன்பாக சேர்த்தல் வேண்டும். அன்றைய தினம் பி.ப.3.00 மணிக்கு கூறுவிலைகள் திறக்கப்படும். அப்பொழுது, கூறுவிலை கோரியவர்கள் அல்லது அவரது பிரதிநிதிகள் சமூகமளிக்கமுடியும்.
5. கூறுவிலைகள் உள்ளடக்கிய தபால் உறையில், இடதுபக்க மேல் மூலையில் "மனிதவள மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டம் தொடர்பான பொருட்களின் கூறுவிலைகள்" எனக் குறிப்பிடல் வேண்டும்.
6. ஏற்றுக்கொள்ளப்பட்ட கூறுவிலை கோரியவர் 3 நாட்களுக்குள் என்னால் வழங்கப்பட்ட வழங்கு கட்டளைகளுக்குப் பொருட்களை வழங்கல் வேண்டும்.

செ.பத்மநாதன்,
தலைவர்/அரசாங்க அதிபர்,
மாவட்டகேள்விச்சபை.

(சி-1410)

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# புலிகள் தலையிட்டதையடுத்து மோதல் சுமுகமாகத் தீர்ந்தது!

தமிழ் - முஸ்லிம் இளைஞர்களிடையே நடைபெற்ற மோதல் சம்பவம் விடுதலைப் புலிகள் தலையிட்டதையடுத்து சுமுகநிலைக்குக் கொண்டுவரப்பட்டது.

நேற்று யாழ்ப்பாணம் ஒஸ்மானியா கல்லூரி அருகில் தமிழ், முஸ்லிம் இளைஞர்கள் குளித்துக்கொண்டிருந்தவேளை - இருதரப்பினருக்கும் இடையில் மோதல் வெடித்தது.

இச்சம்பவம் தொடர்பாக யாழ். மாவட்ட அரசியற்துறையினரிடம் முஸ்லிம் இளைஞர்கள் முறையிட்டனர்.

இதையடுத்து சம்பவ இடத்திற்குச் சென்ற யாழ்.மாவட்ட அரசியற்துறையினர், இருதரப்பினருடனும் கலந்துரையாடி, சுமுகநிலைக்கு கொண்டு வந்தனர்.

சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் எனச் சந்தேகிக்கப்படும் இரு தமிழ் இளைஞர்கள் விடுதலைப் புலிகளால் அழைத்துச்செல்லப்பட்டு ஆலோசனை வழங்கப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்டனர்.

# கனேடிய முன்னாள் ஆயர் யாழ்ப்பாணத்துக்கு விஜயம்!

கனேடிய நாட்டின் முன்னாள் ஆயர் மேதகு ஜோன் எம்.சேர்லோட் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்துள்ளார்.

நேற்றுக்காலை யாழ். வந்திருந்த அவர், யாழ்ப்பாணத்தில் பல்வேறு தரப்பினரையும் சந்தித்து, யாழ். குடாநாட்டின் நிலைவரம் குறித்து கேட்டறிந்தார்.

நேற்றைய தினம் ஆயர் இல்லத்திற்குச் சென்ற அவர், யாழ். ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் அவர்களைச் சந்தித்தார். பின்னர், மனிதநேய அமைப்புக்களின் ஒன்றியப் பிரதிநிதிகளைச் சந்தித்து யாழ். நிலைவரம் குறித்துக் கேட்டறிந்தார்.

நேற்றுக்காலை கிளிநொச்சிக்குச் சென்ற ஆயர், அங்குள்ள மதப் பிரதிநிதிகள், அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் ஆகியோரைச் சந்தித்து அங்குள்ள நிலைவரங்களையும் கேட்டறிந்தார்.

எதிர்வரும் ஞாயிறன்று நடைபெறவுள்ள சமூகசேவை உத்தியோகஸ்தர் போட்டிப் பரீட்சைக்கான 'பொது உளச்சார்பு' எதிர்பார்க்கை மாதிரி வினாத்தாள் நாளை மறுநாள் 'நமது ஈழநாடு' பத்திரிகையில் பிரசுரமாகவுள்ளது. பிரதிகளுக்கு முந்துங்கள்

## இரு முஸ்லிம்...

இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். மொகைதீன் பாபா உசனார், முகம்மது அலியார் - பௌசில் ஆகிய இரண்டு முஸ்லிம் இளைஞர்களுமே கைது செய்யப்பட்டோராவர்.

இவர்களைக் கைது செய்த பொலிஸார், நேற்றுக் கல்முனை மஜிஸ்திரேட் நீதவான் எம். வி. முகைடீன் முன்னிலையில் ஆஜர் படுத்தியபோது, எதிர்வரும் எட்டாம் திகதி வரை இவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

மேற்படி இரண்டு முஸ்லிம்கள் காணாமல்போனமைக்கு தனிப்பட்ட ரீதியான கொடுக்கல், வாங்கல் பிரச்சினையே காரணம் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (07)

நேற்று நல்லூர் ஆலயச் சூழலில்

# வீதித் தடையினை இடித்துத் தள்ளி உள்நுழைந்தது இராணுவ வாகனம்!

(யாழ்ப்பாணம்)

நல்லூர் ஆலயச் சூழலில் வீதித் தடையைத் தாண்டிசென்ற இராணுவ வாகனத்தை, தொண்டர்கள் தடுத்து நிறுத்தியபோது, கடமையில் நின்ற பொலிஸார் - வீதித்தடையைத் தள்ளி விழுத்தியதால் - அந்த இடத்தில் சிறிது நேரம் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

நேற்றுமாலை 3 மணியளவில்- சப்பரத் திருவிழாவினைக் காண, பெருமளவிலான பக்தர்கள் திரண்டு வந்திருந்த சமயம், இராணுவ வாகனமொன்று அரசடி வீதியூடாக உள்நுழைந்தது.

அவ்வேளை, அரசடி வீதியில் கடமையில் நின்ற தொண்டர்கள் வாகனத்தைச் செல்லவேண்டாமெனக் கூறியபோது, அவ்விடத்தில் நின்ற பொலிஸார் வீதித்தடைக்குப் போடப்பட்டிருந்த தடியினை அடாவடித்தனமாக கால்களால் உதைத்து விழுத்தினர்.

அப்போது அவ்விடத் தில் கடமையில் நின்ற தொண்டர் படையைச் சேர்ந்த இளைஞனுக்கு காலில் காயம் ஏற்பட்டது.

இது சம்பந்தமாக நல்லூர் இந்து விடுதியிலுள்ள பொலிஸ் அதிகாரியிடம் முறையிட்டபோது- நாங்கள் வரும்போது நீங்கள் வீதித் தடையினை எடுக்கவேண்டுமென பொலிஸ நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார்.

நல்லூர் ஆலயத் திருவிழா ஏற்பாட்டுக் கூட்டத்தில் பொலிஸாரும் இணைந்தே ஆலய வீதிக்குள் எவரும் உள்நுழையக் கூடாதென முடிவு எடுக்கப்பட்டது. ஆனால், சட்டத்தைக் காக்கவேண்டிய பொலிஸாரே கடமையினைக் காக்கத் தவறியுள்ளார்கள் என்பது இங்கு சுட்டிக்காட்டப்படத்தக்கது.

## குரங்குப்பாஞ்சான்...

நாங்கள் விரும்பவில்லை.

இதுபற்றி தலைமையுடன் கலந்து பேசி, விரைவில் ஒரு முடிவுக்கு வருகிறோம் என்று விடுதலைப் புலிகளின் திருகோணமலை மாவட்டத் தளபதி கேணல் பதுமன் கூறினார். அந்த முடிவுகள் கிடைத்தவுடன், மேலும் இந்த விடயம் தொடர்பாகக் கலந்துரையாடலை மேற்கொள்வதற்காக, கண்காணிப்புக்குழுவின் தலைவர் அங்கே செல்வார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதி - அந்த முகாமை இராணுவ ரீதியாகத் தலையிட்டு அகற்றவேண்டுமென்று, பிரதமருக்குக கடிதம் எழுதியுள்ளார். இதுபற்றி விடுதலைப் புலிகளுக்குத் தெரிவித்தோம். இந்த சின்னஞ்சிறிய முகாம் தொடர்பாக - யுத்தநிறுத்தமே கேள்விக்குள்ளாகும் அபாயம் இருப்பதை முக்கிய செய்தியாக, நாங்கள் விடுதலைப் புலிகளுக்குத் தெரிவித்தோம்.

புதிய யோசனை பற்றி புலிகள் கருத்துத் தெரிவிக்கக் காலக்கெடு எதுவும் விதிக்கவில்லை. எங்களுடைய இன்றைய பேச்சுவார்த்தையின்படி - அடுத்த ஒரு வாரம் அல்லது பத்து நாட்களுக்குள் விடுதலைப் புலிகள் இந்த விடயத்தில் செயற்பட்டாக வேண்டும். செயற்படுவார்கள் என்பதும் எங்கள் எதிர்பார்ப்பு.

புதிய யோசனை பற்றி, பத்திரிகைகளுக்குக் கருத்து எதனையும் தெரிவிப்பதில்லை என்று, இரு தரப்பும் பொதுவான உடன்பாடொன்றை ஏற்றுக்கொண்டனர். ஆனால், இந்தப் பிரச்சினை சுமுகமாகத் தீரவேண்டும் என்பதே எமது விரும்பம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## கடும் பாதுகாப்பின் கீழ்....

ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவினர் சோதனையின்றி உட்செல்ல அனுமதிக்கவில்லை. பின் கூட்டணியின் முக்கிய பிரமுகர் ஒருவர் வந்து பாதுகாப்புப் பிரிவினருடன் கதைத்த பின் தீவிர பரிசோதனை செய்து இவர்களை உட்செல்ல அனுமதித்தனர். மண்டபத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் ஆனந்தசங்கரியும், அமிர்தலிங்கத்தின் பாரியார் மங்கையர்க்கரசியும் இருந்தனர்.

இச்சம்பவம் தொடர்பாக கருத்துத் தெரிவித்த குமரகுருபரன், தமிழர் வாழும் வடக்கு - கிழக்கை தனித்தனியாகப் பிரிக்கக்கோரும் ஜனாதிபதியின் பாதுகாப்புப் பிரிவினரின் கெடுபிடிகளின்கீழ் தமிழ்த் தலைவர் என்று சொல்லப்படும் ஒருவருக்குப் பிறந்ததின நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டது அவமானகரமான செயலாகும் எனத் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் கலந்துகொண்ட அறிஞர்கள், கல்விமான்கள், மனித உரிமை செயற்பாட்டாளர்கள் அனைவரும் கடும் சோதனைக்குட்படுத்தப்பட்டதுடன் இவர்கள் கொண்டுசென்ற பொருட்கள்கூட ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவினரால் துருவித்துருவிச் சோதனையிடப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## கண்காணிப்புக்குழுத் தலைவர்...

நிலைமை போன்ற விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.

குரங்குபாஞ்சான் முகாமைப் புலிகள் அகற்றுவதற்கான சாதகமான பதிலை உடனடியாகத் தரவேண்டுமெனவும், அரசியல் ரீதியில் இந்தச் சம்பவம் பல சிக்கல்களையும், மோசமான விளைவுகளையும் ஏற்படுத்தக்கூடியதெனவும், எனவே, கிளிநொச்சியிலுள்ள புலிகளின் தலைமையகத்துடன் கலந்துரையாடிய பின் தமக்கு சாதகமான பதிலைத் தருமாறும் கண்காணிப்புக்குழுத் தலைவர் புலிகளைக் கேட்டதுடன், குரங்குபாஞ்சான் முகாமை தாம் பார்வையிட வேண்டுமெனவும் கேட்டுள்ளார்.

இதற்குப் பதிலளித்த கேணல் பதுமன், குரங்குபாஞ்சான் முகாம் புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு முன்னரேயே உள்ளது. யுத்தநிறுத்த உடன்படிக்கையில் எமது எல்லைகளையும், எமது முகாம்கள் அமைந்துள்ள இடங்களையும் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளோம். எனவே இந்தச் சம்பவத்தை அரசும் சில ஊடகங்களும் மிகைப்படுத்திச் செய்திகளை வெளிப்படுத்தி வருவதாகக் கூறினார். அத்துடன் குரங்குபாஞ்சான் முகாமை கண்காணிப்புக்குழுவினர் பார்வையிட விரும்பினால், தமக்கு முன்னறிவித்தல் தந்தபின்னர் பார்வையிடலாமெனவும் தெரிவித்தார்.

அத்துடன் மூதூரில் இரண்டு முஸ்லிம்கள் படுகொலை செய்யப்பட்டது தொடர்பாக கருத்துத் தெரிவித்த பதுமன் - இச்சம்பவம் படையினரின் கட்டுப்பாட்டில்தான் நடந்தது. இதற்குப் படையினர்தான் பொறுப்பு. இந்தக் கொலைச் சம்பவங்களை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம். இதற்கும் புலிகளுக்கும் எவ்வித சம்பந்தமுமில்லை. இவ்வாறான சம்பவங்கள் புரிந்துணர்வு ஒப்பந்தத்தைக் குழப்பும் ஒரு நடவடிக்கையாகும்.

அத்துடன் முஸ்லிம்கள் கொலை தொடர்பாகப் பெரிதுபடுத்திய ஊடகங்கள் - இதனால், தமிழர்களுக்கு ஏற்பட்ட பாதிப்புக்களை ஏன் கண்டுகொள்ளவில்லை எனவும் கேள்வி எழுப்பினார். முஸ்லிம்கள் இருவர் கொலைசெய்யப்பட்ட அன்று இரவு இரு தமிழர்கள் இனந்தெரியாதோரால் கடத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்டுள்ளனர். இச்சம்பவத்திற்கு போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினராகிய தகுந்த நடவடிக்கை எடுக்கவேண்டுமெனவும், முஸ்லிம்களின் பாதுகாப்பு எனக்கூறி, கிழக்கில் பொலிஸாருக்கு ஆட்சேர்ப்புச் செய்வதைத் தாம் கடுமையாக எதிர்ப்பதாகவும் கேணல் பதுமன் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பை முடித்துக் கொண்டு திரும்பிய கண்காணிப்புக் குழுவினர் உவர்மலையில் உள்ள இராணுவ முகாமில் திருகோணமலை மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் சுனில் தென்னக்கோனையும் சந்தித்துள்ளனர்.

அங்கு கண்காணிப்புக் குழுத் தலைவர் குரங்குபாஞ்சான் முகாம் தொடர்பாக 10 நாள்களுக்குள் ஒரு முடிவைத் தருவதாகப் புலிகள் தெரிவித்ததாகக் கூறினார். அத்துடன், 10 நாள் கழித்து, மீளவும் திருகோணமலை வரும் ரெலவ்சன் புலிகளை மீளவும் சந்திப்பார் எனத் தெரியவருகிறது. (04,10)

## திலீபன்...

கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் அ.விநாயகமூர்த்தி, எம்.கே. சிவாஜிலிங்கம், முன்னாள் கிராம சேவையாளர் சிவராசா, முன்னாள் கல்வி அதிகாரி செம்பியன் செல்வன் ஆகியோர் மலர்மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினர்.

யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் விநாயகமூர்த்தி, சிவாஜிலிங்கம், செம்பியன் செல்வன், யாழ்.மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி, ஈழவேந்தன் ஆகியோர் உரையாற்றினர்.


தேர்ரேறும் பெருமானை பிரார்த்திக்கின்றோம்

அழகிய கூந்தலின் ரகசியம்




(சி-1409)

பக்க விளைவு அற்றது

பயோட்டின் H உடன் இயற்கையான விட்டமின் E சேர்க்கப்பட்டு தற்போது பயோட்டினெக்ஸ் E என்ற பெயரில் அறிமுகமாகிறது.

பயோட்டினெக்ஸ் -E

எது உங்கள் பிரச்சினை

- தலைமயிர் உதிர்கிறதா
- தலைமயிர் வளர்ச்சியின்மையா
- தலைமயிர் நுனி வெடிப்பா
- வலுவிழந்த தலைமயிரா
- வறண்ட சருமமா
- தோலில் சுருக்கம் விழுந்து வயதான தோற்றமா
- சரும நோய்களா
- உடைந்த ஒழுங்கற்ற நகங்களா

?



பயோட்டினுடன் விட்டமின் - E யும் சேர்ந்துள்ளதால் சிறந்த பயன் கிடைக்கும்

இவ்வனைத்துப் பிரச்சினைகளுக்கும் உடன் நிவாரணி விஞ்ஞான ரீதியில் உறுதிப்படுத்தப்பட்ட

பாவனை முறை: தினம் 2 கப்சியூல்ஸ் 3 மாத காலத்திற்கு பாவிக்கவும்.

BIOTINEX -E

இயற்கையான பயோட்டினெக்ஸ் -E தெற்காசிய மக்களுக்கென பிரத்தியேகமாகத் தயாரிக்கப்பட்டது சிறப்பம்சமாகும்.

யாழ். முகவர்: ஜெகன் பார்மசி, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். T.P. 021-2223191

வன்னி முகவர்: அகிலன்ஸ் பார்மசி, பிள்ளையார் மருந்தகம், கிளிநொச்சி.

மற்றும் நாடளாவிய ரீதியில் அனைத்து முன்னணி பார்மசிகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

Marketed By: Arkem Colombo
Tel: 470290, 075-344436, E.mail - arkem@sltnet.lk



நாட்டில் சாந்தி, சமாதானம் நிலைக்க தேரேறும் நல்லூர்க் கந்தனை பிரார்த்திக்கின்றோம்.



சகல வகையான உணவு வகைகளுக்கும் நீங்கள் நாடவேண்டியது

ஸ்ரீ தாமோதரவிலாஸ்

401, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

(சி-1408)

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 26-.08.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# நல்லைக் கந்தன் இரதோற்சவ சிறப்புமலர்

பரமகருணாநிதியாகிய சிவபெருமான்-ஆன்மாக்கள் தமது திருவருளைப் பற்றி முத்தியின்பம் பெறுவதற்பொருட்டு - படைததல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்னும் ஐந்தொழில்களையும் நிகழ்த் தியருள்கின்றார். வேத, சிவாகம முறைப்படி அமைந்த அவர்தம் ஆலயங்களிலும், விநாயகர், அம்பாள், முருகன் முதலாம் அவரிற் பிரிவில்லாகி கடவுளை ஆலயங்களிலும், வருடந்தோறும் இவ்வைந்தொழில் களையும் குறியீடு களாய்ப் புலப்படுத்தும் பெருவிழாக்கள் (மஹோற்சவங்கள்) முறைப்படி நிகழ்த்தப் படுகின்றன.

கொடியேற்றம் - படைத்தலையும், தொடர்நது வரும் மஹோற்சவங்கள் - காத்தலையும், தேர்த்திருவிழா - அழித் தலையும், பிட்சாடனர் உற்சவம் (சிவன் கோயில்களில் மட்டும் இடம்பெறும்) - மறைத்தலையும், தீர்த்தோற்சவம் - அருளலையும் குறிக்கும் என்பர்.

எங்கிருந்தாலும் தம் ஊர்க்கோயில் களை நாடித் தேர்த்திருவிழாவன்றாவது வரும் அடியார்களின் எண்ணிக்கை கொண்டு, தேர்த்திருவிழாவின் முதன் மையை நன்கறிந்து கொள்ளலாம்.

தேர் என்பது தொன்மை வாய்ந்த தமிழ்ச்சொல். செல்வரும், தலைமைப் பாடுடையோரும், வேந்தரும் தம் பயணங்களுக்கும், போருக்கும் - குதிரைகள் பூட்டிய தேர்களைப் பயன்படுத்தினர். அத்தேர்களின் அளவும் சிறிது, அமைப்பும் வேறு. எல்லோர்க்கும் தலைவரான பரம்பொருளுக்கு மேற்பாகம் கோபுரவடிவிலும், அடிப்பாகம் வட்ட உருளை வடிவிலும் அமைக்கப்படும் தேர்கள், உருவால் பிரமாண்டமானவை. அழகாலும், தெய்வீகத்தாலும் பக்திப்பரவசத்தை ஏற்படுத்துபவை. தொடக்க காலத்தில் சகடைகளின் மேல் பனைத் தூண்களும், சலாகைகள் கொண்டும் - பீடத்தின் மேல் அறை அமைத்துக் கூம்பு வடிவமான மேற்கூரையைச் சிவப்பு, வெள்ளைத் துணிகளாலே போர்த்து, தற்காலிக தேர்களை அமைத்தனர். இவை இன்னும் பயன்படுத்தப்படுகின்றன. மரங்கொண்டு - சிற்பத்திறனும், சிற்பஸ்திர ஆகமமுறையும் ஒருசேர அமைந்த சித்திரத் தேர்கள், படிப்படியாகக் கட்டுத்தேர்களின் இடத்தை எடுத்து வருவது கண்கூடு. சித்திரத் தேர்கள் - ஆகம சிற்பசாஸ்திர வல்லுநர்களான ஸ்தபதிகளால் உருவாக்கப்படுவன.

இவற்றுக்கான மரங்களைத் தெரிவது தொடக்கம், தேர் உருவாக்கத்தின் ஒவ்வொரு கட்டத்திலும் ஆகமமுறைகளும், சிற்ப சாஸ்திர ஒழுங்கும் ஸ்தபதிகளால் மிகுந்த ஆசாரத்துடனும், பயபக்தியுடனும் மேற்கொள்ளப்படுவது சிறப்பித்துக் கூறவேண்டுவதாகும்.

தேரின் ஒவ்வொரு கூறும் - தத்துவ உண்மைகளைத் தன்னகத்தே கொண்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது. மட்டக்களப்புச் சைவப் புலவர், தேசியமணி, அருணாசலம் ஆசிரியரின் சைவசமய சிந்தாமணி என்ற நூலில் காணப்படுவன இவை.

தேரின் பீடம் வரையுள்ள அடிப்பாகம்-அண்டம், அதன் கோபுரம் அல்லது விமானம் அமைப்பிலுள்ள மேற்பாகம் பிண்டம், இதன் உறுப்புக்கள் இருபது. அவையும் அவை குறித்து நிற்பனவும் பின்வருவன.

1. அச்சு - மந்திரக்கலை. 2. சக்கரம்-சூரிய சந்திரர். 3. தட்டுக்கள் - பதினான்கு உலகங்கள். 4 ஆசனம் - ஆகாயம் (வெளி). 5 தேர்மொட்டு (கொடிஞ்சி) - உதய அஸ்தமனமலைகள். 6. கொடிகள் - புண்ணியநதிகள், குளங்கள் முதலியன. 7. விதானம் (மேல்தட்டி) - நட்சத்திரங்கள். 8. மேல் விரிப்பு - மோட்ச உலகம். 9. சட்டங்கள் - யாகங்கள். 10. திரைச் சீலை- ஏழுகடல்கள். 11. கலன்கள் - தன்மேந் திரியங்கள், ஞானேந்திரயங்கள். 12. முளைகள் - அறுபத்து நான்கு கலைகள். 13. மணிகள் - வேதங்கள், ஆகமங்கள், தர்மநூல்கள். 15. வில் - மகாமேரு. 16. வில், நாண் - வாசுகி. 17. வில்லிற்கட்டி யமணி - சரஸ்வதி. 18. அம்பு - விஷ்ணு. 19. அம்பின் இறகு, கூர் - அக்கினி. 20. வாயுக்கள் - பாகன்.

ஆக, அண்ட பிண்டங்கள் அனைத்தும் தேராகவும், உறுப்புக்கள் அவற்றின் பாகங் களாகவும் அமைய - அவற்றின் மீதமர்ந்து இறைவன் அதைச் செலுத்தி அருள்கிறார் என்பது தத்துவம். கோல மாஞ்ஞையிற் குலாவிய குமர னும், சிவனும் வேறல்லர் என்றும் கந்த புராணம் உரைக்கும். எனவே, பரம்பொருளாகிய நல்லைக் குமரனே இன்று தேரில் அமர்ந்து அடியார்க்கு அருள்புரிய எழுந்தருள்கின்றான் என்பதை உணர்த்தும் அப்பெருமானை மனமொழி, மெய்களால் வழிபட்டு உய் வோம்.

- சொக்கன் -



ஜப்பான் தயாரிப்பான
Sony National T.V க்கள்,
வீடியோ டெக், செற்றப்
ரேடியோக்கள் மலிவு
விலையில்
பெற்றுக்கொள்ள
SHUN MULTI TRADE CENTRE
150, கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம். (சி.1389)

சுகாதார முறைப்படி சுத்திகரிக்கப்பட்டு தயாரிக்கப்படுகின்ற
கோறல் ரேஸ்டி
தயாரிப்புக்களை ஒருமுறை அருந்திப் பாருங்கள்.
நெல்லிரசம், கிறேப்ஸ் கோடியல் ஜாம்வகைகள் இன்னும் பல
கோறல் ரேஸ்டி (F) பூட் இன்டஸ்றீஸ்
ஆடியபாதம் வீதி, கேணியடி வைரவர் கோவிலடி, திருநெல்வேலி. (சி.1371)

ஒவ் (F) செற் பிறின்ட்,
றோணியோ கணினி மூலம்
தமிழ், ஆங்கில தட்டச்சு
வேலைகளுக்கு
தலா அச்சகம்
138, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P.222 2881 (சி.1385)

இலங்கையன்
பதிப்பகம்
334 (234 A) கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம்.
T.P. 222 - 5698 (சி.1383)

அன்பளிப்புப் பொருட்கள் பெற்றுக் கொள்ளவும்,
கல்யாணி கவரிங் செற் வாடகைக்குப் பெற்றுக்
கொள்ளவும் நீங்கள் நாடவேண்டிய இடம்
இராமாசசி அழகுமாடம்
பருத்தித்துறை வீதி, கல்வியங்காடு. T.P. 0777 - 110315 (சி.1370)

பல் கட்டுவதற்கும், பற்களுக்கு
கிளிப் போடவும் நவீன ரக
பிறேம்களில் மூக்குக்
கண்ணாடிகளைப் பெறவும்
மொறாயஸ் ஒளிச்சுடர்
பல் மூக்குக் கண்ணாடியகம்
இல.05, பலாலி வீதி,
(அப்பலோ கிளினிக் முன்)
யாழ்ப்பாணம். (சி.1384)

சீமாட்டி
புடவைக்கடல்
122, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
T.P 021 - 2222196 (சி.1373)

பணப் பாதுகாப்புப் பெட்டிகள், வீட்டு அலுமாரிகள், கோவை
அலுமாரிகள், மெத்தைகள், கொம்பியூட்டர் கதிரைகள்
இன்னும் பல.......
திருச்செந்தூரன் வர்த்தக நிலையம்
315, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம். (சி.1390)

ஆண்கள், பெண்களுக்குரிய
சைக்கிள்கள் அனைத்தும்
மொத்தமாகவும், சில்லறையாகவும்
பெற்றுக் கொள்ள
நாடவேண்டிய இடம்
வெங்கடேஸ்வரா
125A, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். (சி.1374)

சுத்தமான சைவ
உணவுகளுக்கும் சிற்றுண்டி
வகைகளுக்கும்
சாந்தி
கபே
இல. 278, கஸ்தூரியார்
வீதி, யாழ்ப்பாணம். (சி.1382)

DIAL LINKS
THE PHONE SHOP
K.K.S.Road, Jaffna. T.P.021 - 22254485 (சி.1386)

நல்லூரானின்
தேர்த்திருவிழா சிறப்புற
அமைய வாழ்த்துகின்றோம்
PARATHAN
MULTIPLE
SERVICES
மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம். (சி.1388)

# நல்லைக் கந்தன் இரதோற்சவ சிறப்புமலர்

சைவர்களுடைய நாகரிகம் திருக்கோயில்களை மையமாகக் கொண்டே கட்டியெழுப்பப்பட்டவை. இந்த உண்மையினைத் திருக்கோயில் கல்வெட்டுக்களும், திருமுறைகளும் பரக்கக் கூறுகின்றன. பழமையின் முதிர்வே புதுமையைப் பிறப்பிக்கின்றது. சிலர் பழமையை மலடாக்கி, புதுமையைத் தோற்றுவிக்க முயலுகின்றனர். மூலவேர் இல்லாத மரம் பாறுவது போன்று, பழைமையாகிய மரபில் உருவாகாத பண்பாடு நிலைப்பதில்லை. பண்பாட்டின் நிலைக்களனாக விளங்கும் ஆலயம் சமுக ஒற்றுமைக்கு அடிப்படையாக விளங்கியமையை, வரலாறு போதிக்கின்றது. சிதறிக் கிடந்த சமுகத்தைத் தெய்வத்தின் முன்னிலையில் இயங்க வைத்து, ஆற்றல்மிக்க சமுதாய இயக்கமாக வளர வைத்த இயங்குசக்தியாக அமைந்தவை ஆலயங்கள் எனில் மிகையாகாது. திருக்கோயில்கள் கடவுள் எழுந்தருளியிருக்கும் இடங்கள் மட்டுமல்ல. சமுதாய மையங்கள் சமுதாயத்தின் இயக்கமே ஆலயத்தில் இடம்பெற்றது. சமுதாய மையமே ஆலயம் அருமையான கூட்டு வாழ்க்கைக்கு ஆலயமே நிலைக்களனாக வேண்டும். ஆலயத்தில் நடைபெறும் வழிபாடுகள் இத்தகைய நோக்கில் அமைந்தவையே, வேற்றுமையில் ஒற்றுமை காண்பதே தெய்வீகம் என்பது ஞானிகள் (அநுபூரிமான்கள்) வாக்கு. வேறுபட்ட மக்கள் அனைவரும் தம் தெய்வத்தின் பேரால் ஒன்றுபட்டு தம் வாழ்வு சிறக்கவும், சமுகவாழ்வு சிறக்கவும் செயற்படும் இடம் ஆலயம். "ஆலயம் தொழுவது சாலவும் நன்று" என ஒளவைப் பாட்டி கூறியுள்ளமை நோக்கத்தக்கது.

சமயம் என்பது இறையருள் பெறும் ஊடகமாகும். ஊடகத்தைப் புனிதமாகக் கையாளுமளவுக்கு நாமும் புனிதமடையலாம். சமயத்தையும், வாழ்க்கையையும் ஒன்று சேர்ப்பது அன்பு. அன்புக்குச் சாதியில்லை. மதமில்லை, உயர்வு, தாழ்வு இல்லை, இதுவே சமய வாழ்வு அளிக்கும் ஒப்பரிய உண்மை. இந்த உண்மையை நடைமுறைப்படுத்துவனவே சமயவழிபாட்டு முறைகள். ஆலயத்தில் நடைபெறும் தினசரி (நித்திய) வழிபாடுகள் அங்கே நடைபெறும் மஹோற்சவம் என்று சொல்லப்படும் விழாக்கள் அன்புவழியில் ஆண்டவனருள் பெறும் திருவிழாக்களாகும்.

திருக்கோயில்களில் நடைபெறும் உற்



சவங்களுள், கூட்டு வாழ்வை சமூக ஒற்றுமையை மனிதநேயத்தை நடைமுறைப் படுத்தும் தலையாய உற்சவம் தேர்த்திருவிழா ஆகும். ஊர்கூடித் தேர் இழுத்தல் என்பது வேற்றுமையை மறந்து ஆண்டவனிடத்தில் அனைவரும் வேண்டுதல் செய்யும் நடைமுறையைக் காட்டிநிற்கிறது. பிரபஞ்சக் கலைஞனாகிய இறைவனை பிரபஞ்ச வடி விலமைத்துக் கலையழகு கொண்டு பொழிந்து விளங்கும் தேரில் உலாவரச் செய்தல் பெரும் சிறப்பு வாய்ந்தது. இறைவனின் அடியார்களின் 'அகங்காரத்தை அழித்தொழிப்பதற்காக மஹோற்சவக் காலத்தில் தேரேறி வருவதாக ஆகமங்கள் கூறுகின்றன.

"சர்வேஸ்வரன் தேரேறி திரிபுராங்கனின் திரிபுரங்களை அழித்தார் என்ற செய்தியின் பொருள் அவர் ஆன்மாக்களின் மும்மலங்களை அழித்து ஆனந்தத்தைக் கொடுக்கும் நிகழ்வென்பதை,

"அப்பணி செய்சடை ஆதிபுராதனன்
முப்புரம் சென்றனன் என்பார்கள் மூடர்கள்
முப்புரமாவது மும்மல காரியம்.
அப்புர மெய்தமை யாரறிவாரோ என்பது

திருமந்திரம். ஆகவே, சிவன் மும்மலங்களை அழித்து, ஆன்மாக்களுக்கு ஆனந்தத்தைக் கொடுப்பதற்கு ஆதாரமாகக் கொண்ட திருவருட்சக்தியின் வடிவமே தேராகும் எனலாம். அகந்தை உள்ள இடத்தில் அதர்மம் தலை தூக்குகிறது. தர்மம் நிலைநாட்டப்படும்போதே உலகம் நிலைக்கின்றது. மக்கள் வாழ்வாங்கு சமாதானமாக வாழ முடிகிறது. எனவே, தர்மம் எது, அதர்மம் எது எனப் பகுத்தாய்ந்து தர்மத்தின்படி செயற்பட நம்மை வழிப்படுத்தும் விழாவே தேர் (தெரிந்துகொள்ளும்) பெருவிழாவாகும். தேர்த்திருவிழாவின் போது, சிதறு தேங்காய் உடைப்பதும், தேர்ச்சில்லுக்குள் பூசணிக்காயை வைத்துச் சிதறச் செய்வதும், இரதோற்சவம் அதர்மத்தை அழிப்பதை உணர்த்தும் செயற்பாடாக மரபுவழியாக அறியப்படுகின்றது. திருக்கோயிலை மையமாகக் கொண்டு நீதி விளங்கவேண்டும் என்பதைத் தெரிந்துகொள்ளவே தேர்ப் பெருவிழா ஆலயங்களில் இடம்பெறுகின்றன.

எவ்வாறு ஆலயங்கள் ஆகமமுறையிலான அளவுப் பிரமாணத்தில் அமைக் கப்படுகின்றனவோ அதேபோன்று, சதுரமாகவும், வட்டமாகவும் அறுகோணமாகவும், எண்கோணமாகவும் கணிதமுறையில் தேர் அமைக்கப்படுவதாகச் சிற்ப நூல்களில் கூறப்படுகின்றன. பிற்காலத்தில் கலை வளர்ச்சிக்கேற்ப - நவகோண, தசகோணத் தேர்களும் உருவாக்கப்பட்டமை அறியமுடிகிறது.

ஆன்மாவுக்கு அதன் உடலே தேராகும். இவ்வகையில் ஆண்டவனுக்கு அனைத்து உலகங்களையும் அடக்கிய பேரண்டமே தேராக அமைகின்றது. அத்தேரே அவனுக்குக் கோயிலுமாகும். எனவேதான், கோயில்போன்று அமைக்கப்படும் தேரில் - பூலோகவாழ்க்கையும், வானுலக வாழ்க்கையும், சுவர்க்கலோக வாழ்க்கையும் அழகிய பல உருவங்கள் மூலம் சித்தரித்துக் காட்டப்படும். பூலோக வாழ்க்கையில் - அரசன் கொலுவிருத்தல், ஆடல், மகளிர் நடனமாடுதல் முதலிய பல காட்சிகளும், காமசாஸ்திரத் தைச் சித்தரிக்கும் காட்சிகளும் ஆங்காங்கே இடம்பெறும்.

வானுலக வாழ்க்கையே - கின்னரர், இம்புருடர், கந்தருபர் போன்ற உருவங்கள் சிததரித்து நிற்கும். சுவர்க்க உலக வாழ்க்கையே - கடவுள் உருவங்கள் எடுத்துக்காட்டும். இப்படியாகப் பல்வேறுகாட்சிகளைக் கொண்டு வாழ்வின் தத்துவங்களைக் காட்டிநிற்கும் கோவில், தேர் கவின் கலையின் வடிவம் என்றால் மிகையில்லை. எந்தப் பக்கம் நின்று பார்க்கிலும், கலை அழகு பொங்கிப் பிரவாகிக்கும் நிலையைப் நாம் தேரில் காணலாம். பண்பாடுடைய சமுதாயத்தின் சிறந்த பொக்கிசம் கலை. அக்கலையை ரதமாக்கிக் கலை பவனிவரும் உற்சவமே தேர்த் திருவிழா.

இறைவனை நாடி மக்கள் ஆலயம் செல்வது ஒருபுறமிருக்க, தேர்த்திருவிழாவிலே இறைவனே - மக்களை நாடி வீதி வலம் வருகின்றான். கோயிலுக்குள் செல்லமுடியாத மக்களும், பறவைப் பட்சிகளும், விலங்கினங்களும், அனைத்து உயிர்க் கூட்டங்களும், நலன்பெறவும், வளம் பெறவும் ஆண்டவன் அருள் வெள்ளம் பொங்கிப் பெருகும் அருட்பிரவாக விழாவே தேர்ப பெருவிழாவாகும். முடிவாகச் சொன்னால்- தேர்த்திருவிழா சமூக ஒற்றுமைக்கும், கூட்டுறவுக்கும், கூட்டு முயற்சிக்கும், வழிகாட்டுவது. கடவுட் காட்சியைக் கவின் கலை நயத்தால் காட்டுவது தேர்ப்பெரு விழா எனலாம்.

உயர்வற உயர்ந்துள்ள பொருளோடு, உயிர் ஓர் உயிர்ப்புள்ள உறவைக் கொள்ளும்போது, உய்தி பெறுகின்றது. உயிர்க்கின்றது. அதன் குறிக்கோளும் கைகூடுகின்றது. இந்த உறவு எளிதில் கைகூடுவதன்று. கடவுளை அறிதல் (தேர்தல் தேர்+தல்) வேண்டும். அத்தகைய இறை அறிவை வலுப்படுத்தும் அதற்கு உரமூட்டும் பெருவிழாவே பெருமைக்குரிய விழாவே தேர்த்திருவிழாவாகும்.

நாச்சியார் - செல்வநாயகம்
இந்துநாகரிகத்துறை யாழ்.பல்கலைக்கழகம்.

தங்க வைர நகைகளைப் பெற்றுக்கொள்ள சிறந்த ஸ்தாபனம்
சாரங்கா நகைமாடம்
இல. 157/1 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P. 021 - 222 - 2480 Fax - 021 - 222 - 2480
அருள் முருகன் நகையகம் 96/1 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
சாரங்கன் நகைமாடம் அன் சென்ரர் 45, கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம் T.P. 021 - 222 - 6059
(சி.1399)

மங்கையர் விரும்பும் நவ நாகரிக நகை வடிவங்களை நம்பிக்கையுடன் பெற்றுக்கொள்ள நாடுங்கள்.
ஸ்ரீ நித்யா நகைமாளிகை
இல.01 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P. 021 -222 - 2709
(சி.1400)

தரமான உருக்குத் தளபாடங்களை விரும்பிய வடிவில் தேவையான நேரத்தில் நியாயமான விலையில் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய உற்பத்தி நிறுவனம்
EQUIP UNIT TRUST (EUT)
749, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்
(யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரிக்கு எதிர்)
(சி.1367)


T.V. டெக், றைஸ்குக்கர், காஸ்குக்கர், எவர்சில்வர், வீட்டுப்பாவனைப் பொருட்கள், குழந்தைகளுக்கான விளையாட்டுப் பொருட்களுக்கும்
நீங்கள் நாடவேண்டிய ஸ்தாபனம்
ராஜு ஸ்ரோர்ஸ்
ராஜு பில்டிங்
67, 69, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P. 0048 - 021 -222 - 5224
(சி.1363)

ஆசியாவில் நம்பர் 1 சீமெந்து
SLS - 107 அங்கீகாரம் பெற்றது
ISO - 8002 தரம் பெற்றது
BSS - 12-1991 தரத்திற்கு அமைவானது
RAMCO CEMENT
ராம்கோ சீமெந்து
ராம்கோ சீமெந்து ஏக இறக்குமதியாளர்
ஈஸ்வரபவான் & கொம்பனி
91, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
T.P. 021 - 222 - 2350
(சி.1365)

உங்களுக்குத் தேவையான புத்தகங்கள், பாடசாலை அலுவலக உபகரணங்களை மலிவாகவும், நியாய விலையிலும் பெற்றுக் கொள்ள நீங்கள் நாடவேண்டிய ஸ்தாபனம்
ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்
212,கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
T.P. 021 - 222 - 5542
(சி.1398)

# நல்லைக் கந்தன் இரதோற்சவ சிறப்புமலர்

கலியுகத்தின் கண்கண்ட தெய்வமாக விளங்குபவன் முருகன். ஆறுமுகங்களையுடையவன். தியானம் செய்யும் யோகிகள் இருதயத்தில் எழுந்தருளியிருப்பவன், பெரு வீரன, அழகிய மயில்வாகனன், சிவகுமாரன், தேவ சேனைத் தலைவன், நெஞ்சம் என்னும் குகையில் இருப்பவன் எனப் புகழ்ந்துரைக்கப்படுபவன் கந்தன். உலகை உய்வித்தல் பொருட்டு, உண்டுபண்ணப் பட்டவன் முருகக் கடவுள்.



சிவனாரது ஐம்பொறிகளின்று ஐந்து ஒளிப்பிழம்பு, மனத்தினின்று மற்றோர் ஒளிப்பிழம்புமாக ஆறு ஒளிப்பிழம்புகள் வெளிக்கிளம்பின. அவற்றின் பிரகாசத்தைக் கண்டு, அம்பிகையே திகைத் துபபோய்விட்டாள். மற்ற தேவர்கள் ஆஞ்சியதில் ஆச்சரியம் என்ன இருக்கிறது. கங்கையை உலர்த்தி விட்டு, அவ்வொளித்திரள் சரவணப் பொய்கையில் பிரவேசித்தது. நாணங் காட்டிலுள்ள நீர்நிலை என்று, சரவணப்பொய்கை பொருள்படுகிறது. அங்கிருந்து ஆறு முகம், பன்னிரு தோள், ஓர் உடல் உடைய தெய்வக் குழவியொன்று உருவெடுத்து வந்தது. அக்குழந்தையே சண்முகனாக உருப்பெற்றது.

ஆறுமுகத்துக்கு ஒப்ப அவனுக்குப் பன்னிருகைகள், ஒரு மேனியும் உடையவனாக சரவணபவன் தோன்றியத்தில், பொருள் பல புதைந்து கிடக்கின்றன. இயற்கையின் அமைப்பில் பல தலைகளுக்குத் தேவையில்லை. இரண்டு தலையுடன் ஏதாவது பிறந்தால், அது பிழைக்காது. ஆறுதலைகளுக்கு வேலை என்ன என்பது கேள்வி.

பல கைகள் இருந்தால், அவைகளைப் பயன் படுத்தலாம். பல தலைகளைப் பயன்படுத்த யாருக்கும் முடியாது. ஜீவர்களுள் மனிதனாகப் பிறந்து, மகிமைகளெல்லாம் உருவெடுத்தவன் முருகன். உயர்ந்த தத்துவங்களை உருவகப்படுத்தி, ஒவ்வொன்றும் ஒவ்வொரு தலையாகக் கருதப்படுகிறது. தலைபெறுகிற சிறப்பை வேறு எந்த அங்கமும் பெறமுடியாது. சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் ஆகிய ஐந்தின் வடிவத்தில் இயற்கையாய் இருக்கிறது. இது ஐந்தின் வகையறிவதற்கு ஐம்பொறிகள் அமைந்துள்ளன. இதற்கெல்லாம் மேலாக எண்ணவும், உணரவும் வல்லது மனது. இவை ஆறும் ஆறுமுகங்களுக்கு ஒப்பானவை.

முகம் போன்று இவை பாராட்டப்பட வேண்டும். முறையாக இவைகளை வளர்க்குங்கால், ஒவ்வொன்றும் ஒரு முகத்துக்குச் சமமானது. ஆறுமுகத்துக்கு ஒப்ப அவனுக்குப் பன்னிருகைகள் அமைகின்றன. ஒவ்வொரு கையிலும் ஒரு தெய்வத்தின் ஆயுதத்தை அவன் ஏந்தியிருக்கிறான்.

"ஆயுதம் இல்லாதவன் அரை மனிதன்" ஆயுதங்கள் பலவற்றைக் கையாளுமளவு மனிதன் நிறைமனிதன் ஆகிறான். மனிதனுக்கும், மற்ற சிற்றுயிர்களுக்கும் ஒரு பெரிய வித்தியாசம் உண்டு. நகங்களை உடைத்திருப்பது சிங்கம் போன்ற விலங்குக்கு ஆயுதம். கூர்மையான அலகைக் கொண்டிருப்பது கழுகு போன்ற பறவைக்கு ஆயுதம். பின்பு அத்தகைய ஆயுதங்களை மாற்றிக் கொள்ளும் சுதந்திரம் அவ்வுயிர்களுக்குக் கிடையாது.

மனிதனோ எண்ணியவாறு கணக்கற்ற ஆயுதங்களை மாற்றி மாற்றியெடுத்துக் கையாளலாம்.

மனிதர்களின் மேலாம் வடிவமாயுள்ள முருகக் கடவுள் பன்னிருகைகளை அடைந்திருப்பது, மக்களுக்கு அவர் களின் ஆற்றலை ஞாபகப்படுத்துதல் பொருட்டேயாகும். முயற்சியுடைய மனிதன் பல கைகளையுடையவன் ஆக லாம் என்பதை, உருவகப்படுத்தி நமக்குச் சண்முகக் கடவுளால் ஞாபகமுட்டப் படுகிறது. தமிழைக்கூட முருகப்பெருமானுடன் இணைத்துப் பேசுவதற்கும் ஒரு மரபுண்டு. அதாவது, தமிழிலுள்ள உயிர் எழுத்துக்கள் 12. முருகனுக்கு கண்கள் 12. தமிழில் மெய யெழுத்துக்கள் 18. முருகவேளுக்கு முகங்கள் 6 தமிழ் மொழியின் இனங்கள் 6. (வல்லினம் 6, மெல்லினம் 6, இடையினம 6). முருகன் கையில் வேலாயுதம் - தமிழிலிருந்த ஆயுத எழுத்தும் உண்டு. வேலாயுதம் இச்சை, கிரியை, ஞானம் என மூன்று தன்மைகளையுடையது. ஆயுத எழுத்தும் மூன்று புள்ளிகளுடையவை. தமிழ் நெடுங் கணக்கைத் தோற்றுவித்தவரும் முருகனே என்பது பெறப்படும். இதனாலேயே கந்தபுராணத்தில் "பிரணவத்தின் உட்பொருளை சிவ பிரானுக்கே விளக்கிய ஞானகுரு (சிவகுரு) முருகக்கடவுள்".

இத்தகு பெருமைகளைத் தன்னகத்தே கொண்ட கந்தப்பெருமான் - பன்னெடுங்காலமாக யாழ்ப்பாணத்தில்-நல்லூரில் வீற்றிருந்து, அருளாட்சி செய்து, அன்பர்களை காக்கும் தமிழர்களின் தலைவனாக, காவலனாக விளங்குகின்றார். நல்லையெம்பதியில் நடைபெறும் மஹோற்சவ காலங்களில் - முருகன் வேற்பெருமானாகவும், பழனியாகவும், முத்துக்குமார சுவாமியாகவும் எழுந்தருளி அருள்பாலிக்கிறார். இன்று அழகிய கலைமணித்திருத்தேரிலே ஆறு முகங்களோடு அபயகரம் காட்டி, எழுந்தருளி வருகின்ற எழில்மயமான அற்புதக்காட்சியினால் நல்லையம்பதி கவின் பெருக்கி நிறைகிறது.நாலா திசைகளிலும் நல்லைக் கந்தனைத் தொழ, அடியவர்களெல்லாம் தங்கள் திருக்கரங் களை சிரசிலே குவித்து, வழிபாடு இயற்றி நிற்கின்றனர்.

ஆறுமுகத்தோடு அபாயகரம் காட்டி
தேறுதலைத் தரவே நல்லூரா தேரிலேறி வருக!
நூறு மாலையோடு நலிந்த வரைக் காக்க
நால திக்கும் தொழவே தேரிறே வருக!
வீறு கொண்ட சூரன் வெம்பகையை முடித்த
வேலைத் தாங்கி முருகா தேரிலேறிவருக
தீர்வு தந்தெமது திருநாட்டைக் காக்க
சேதி யென்று கொண்டு தேரிலேற வருக

என்ற எழில் பொங்கும் நல்லூரில் - அருள் பொங்கும் ஆறுமுகனை தஞ்சமென அவனின் திருத்தாள்களை பற்றி, நல்ல தீர்வுதர வேண்டுவோமாக.

**கவிமாமணி. மதுரகவி. காரை. எம்.பி.அருளானந்தன்.**


தரமான தங்க நகை உலகில்
திடமான கால் பதித்தவர்கள்
**பொன்னரசி நகையகம்**
764, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P 0777 - 0666427 (ச.1368)

சகல பிறின்ரிங் வேலைகளுக்கும்
தனித்துவம் வாய்ந்த நிறுவனம்
**கங்கை ஒவ்செட் பிறின்டேர்ஸ்**
166/3 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம். (ச.1392)

சகல ஆடைத் தெரிவிற்கும்

41, பெரியகடை,
யாழ்ப்பாணம்.
T.P. 222 - 2063 (ச.1369)

தேரேறி வரும் கந்தன் அருளால் ஒரு வருடத்தை பூர்த்தி செய்து பிரபல நிறுவனங்களின் ஏக விநியோகத்தராகிய "The Peninsula Group இன் மருந்து விற்பனைப் பகுதி மிக விரைவில் 518, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணத்தில் திறந்து வைக்கப்படும். அத்துடன் "Mundo Gas" ஏக விநியோகத்தரும் "The Peninsula Group" ஆகும்.
**"கந்தன் அருள் அனைவருக்கும் பாலிக்க வாழ்த்தி நிற்கின்றார்கள்"** (ச.1401)
**THE PENINSULA GROUP 127/10, TEMPLE ROAD. JAFFNA**

தரமான, சுவையான
ஐஸ்சொக், ஐஸ்கிறீம்
பெற்றுக் கொள்ள
**கலாஸ் கிறீம் ஹவுஸ்**
166/2 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம். (ச.1395)

இதமான புகை இன்பத்திற்கு **ஆர்.வி.ஜி பீடிகள்**
நீங்கள் நாடவேண்டிய இடம் **ஆர்.வி.ஜி பீடி ஸ்தாபனம்**
58, நல்லூர் வீதி, குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.
**ஆர்.வி.ஜி மெடிக்கல்ஸ்**
504, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (ச.1393)

உங்கள் வனப்புக்கு மெருகூட்டிடும் வகையிலான மூக்குக் கண்ணாடிகளைப் பெறவும், அழகிய சங்குப் பற்களைப் பொருத்தவும் நாடுங்கள்
**எரிக்கணேஷ்**
மூக்குக்கண்ண்ணாடியகமும், பல்கட்டுமிடமும்.
564, 566, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
கிளை - கொக்குவில், சுன்னாகம்.
T.P.222 2486 (ச.1391)

**பிரசன்னா கணினிக் கல்வி**
கே.கே.எஸ். வீதி, சுன்னாகம்.
எமது நிலையத்தில் குறைந்த செலவில் பின்வரும் சேவைகளைப் பெற்றுக்கொள்ளலாம்.
- பல்கலைக்கழக ஆய்வுக் கட்டுரைகள்
- றோணியோ வேலைகள்,
- **Printing** (Lazer And Dotmatic, Color)
- **Scanning**
- **CD Writing** (Mp3, Audio, Vidio)
- **Computer Sales And Repairing.** (ச.1387)


**தில்லையம்பதி**
GREAVES
**மோட்டோர்ஸ்**


இல.236, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். T.P.222 2488, 021 - 2223820
AGENTS FOR - GREAVES, SPARE PARTS
விவசாய நீர் இறைக்கும் இயந்திரம், மின்சார நீர் இறைக்கும் இயந்திரம் மற்றும் உதிரிப்பாகங்கள் விற்பனையாளர்கள், மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். (ச.1366)

# நல்லைக் கந்தன் இரதோற்சவ சிறப்புமலர்

வழிபாடு மனிதனை நல்வழிப்படுத்துவது. அதிலும் கூட்டு வழிபாடு பலரை நல்வழிப்படுத்தும். கோவில்களிலே நடைபெறும் திருவிழா ஒரு கூட்டு முயற்சியாக உ ளளது. ஒரு குறிப்பிட்ட நாடகளை அதற்கென அமைத்து, ஊரெல்லாம் ஒன்று கூடிவழிபாடு செய்யும் மரபு நீண்ட காலமாகவே தமிழர்களிடையே நிலவி வந்துள்ளது. திருவிழாக்களிலே தேர்த்திருவிழா தனிச்சிறப்பு வாய்ந்தது. அன்றையதினம் தெய்வம் தேரேறி வீதிவரும் காட்சி கண்கொள்ளாதது. சித்திர வேலைப்பாடும், அழகும் இயைந்த தேரிலே தெய்வத்தை இருத்தி எல்லோருமாய் வடம்பிடித்து இழுக்கின்றபோது, அது கூட்டு வழிபாட்டின் உன்னதநிலையாக விளங்குகிறது. சிறுவர் முதல் முதியவர்வரை ஆண்களும், பெண்களுமாய் வடம் பிடித்து நிற்பது - பக்தி என்னும் கயிற்றில் அனைவரும் இணைந்து வாழும் முறைமையைக் காட்டுகிறது.

தேர் வீதிவரும் நாள் கோயிற்சூழல் மட்டுமே பொலிவு பெறும் என்று கூறுவதற்கில்லை. கோவிலைச் சூழவுள்ள தேர் செல்லும் வீதிகளும், அடியவர்கள் கோயிலை நாடிவரும் வீதிகளும் தூய்மையும், புதுப்பொலிவும் பெறுகின்றன. மடைப்பொருட்களும் மற்றும் விற்பனைப் பொருட்களுமாய் வீதிகளெல்லாம் நிறைந்திருக்கும். வீட்டு முற்றங்களில் எதிலும் தூய்மை குடிகொண்டிருக்கும். வாயில்களில் வாழைமரமும், நிறைகுடமும் வருவோரை வரவேற்கும். தேரில் அமர்ந்து தெய்வம் வீட்டுவாயில் வரை வந்து, காட்சிதரும் அந்தநாள் - பிறவிப் பயனை உணர்த்தும். எல்லோரையும் தேடிச் சென்று அருள் செய்யும் தன்மையை மனிதர்க்கு உணர்த்தும்.

சித்திர வேலைப்பாடமைந்த தேரிலே அமைக்கப்படடுள்ள நுண்மையான உருக்கள்



பல வரலாற்றுச் செய்திகளையும், வியத்தகு நிகழ்வுகளையும் விளக்கிநிற்கும். நமது முன்னோர்களின் வழிபாட்டு மரபையும், நடைமுறையையும் காட்டும் வரலாற்று ஆவணமாகவும் தேர் விளங்குகிறது. அடியார்களின் பக்தி அநுபவங்களைச் சித்தரிக்கும் சிற்பங்களின் கலைநுட்பம் எதிர்காலத் தொழில் நுட்பக் கல்விப் பயிற்சிக்கு ஒரு கருவூலமாகவும் திகழ்கிறது. கட்டுத்தேர் நிலையிலிருந்து சித்திரத்தேர் வரை வளர்ந்துள்ள தொழில்நுட்ப வளர்ச்சியை இன்றும் நேரில் காணும் வகையில், இரண்டு வகையான தேர்களும் உலாவரும். அவற்றைத் தொடர்ந்து பாடலும், ஆடலும், இசைக்கருவிகளும் தொடர்ந்துவரும். இது ஒரு பண்பாட்டு நகர்வாகக் காட்சிதரும். தமிழர் வழிபாடு- ஒரு மூலமான பண்பாட்டில் தொடர்ந்து வருவதை இக்காட்சி நன்குணர்த்தும். அதனை எல்லோரும் கண்டு, எமது வாழ்வியலை நன்குணர வாய்ப்பளிக்கும். தேரிலே இறைவன் எம்மை நாடிவந்து அருள் செய்யும் காட்சி, எமது வாழ்க்கைக்கு உறுதுணையாக, ஒரு ஆற்றல் எம்மோடு என்றும் இருக்கிறது என்ற உண்மையையும் எமக்கு உணர்த்துகிறது.

இசையும், பாடலும் இணைந்த பரவசத்தை நாம் பெறும்போது, எமது உள்ளம் மகிழ்கிறது. துன்பங்கள் நினைவிலிருந்து அகன்றுவிட, உள்ளம் அமைதியும், மகிழ்வும் அடைகிறது. அந்த மகிழ்ச்சி அனைவரது முகத்திலும் படர்கிறது. வடம் பிடிக்கும் மனிதக் கரங்கள் ஒன்றையொன்று இறுகப் பற்றும் உணர்வுடன் தொழிற்பட, தேர் நகர்ந்து செல்கிறது. தேரின் வேகத்தைக் கட்டுப்படுத்தி, இறைவனைப் பாங்காக தேரிலே இருத்தி, இழுத்து வரும் பாங்கு - மனித உள்ளங்களின் செம்மையைப் பலப்படுத்தும். இளமையும், முதுமையும் இணைந்து பணிசெய்ய முடியும் என்பதைக் காட்டும். வேறுபாடுகளையும், முரண்பாடுகளையும் முற்றாக மறந்து, வழிபாட்டு நினைவுடன் செயற்படும் கோலம் கண்டு, இறைவன் புன்முறுவலுடன் இனிதே அமர்ந்திருக்கும் காட்சி - உள்ளத்தை உவகை பெறச்செய்யும். மொழியற்ற மௌன வழிபாடு செய்யாமல், வடம் பிடித்து, அரோகரா எனக் கூறும் வாய் மலரும். முகம் பூவாய் மலர, எல்லோரும் மகிழ்வாய் நகர்ந்து செல்லக் கோயில் கோபுரம் நிமிர்ந்து நின்று, தமிழர் வழிபாட்டு மரபைக் காட்டி நிமிர்ந்து நிற்கும். நல்லைக் கந்தன் தேரேறி வரும் நன்னாள் நம் வாழ்வில் மறைக்கமுடியாத நாளாக உள்ளத்திலே படியும்.

**கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்**

## ஏவரும் துணையிலோம்

1. “தேவர் சிறைமீட்ட செல்வனே நல்லைக் கந்தா!
மூவர் போற்றிடும் மூர்த்தியே முருகனே குகனே!
ஏவரும் துணையிலோம் ஏந்தலே சரணம் அடைந்தோம்!
தாவியே தேரேறி வருவாயே எம்மைக் காத்திடவே

2. தரணியில் தஞ்சமெனத் தாளினைப் பிடித்தோம் தேவா!
கரமதில் வேலேந்தி கடுகியே தேரினில் வாராயோ?
புரமெனும் நல்லையில் பூந்தமிழ் பாடினார் பக்தரும்
சிரமதில் கரங்கூப்பி சேந்தனே தொழுதோம் பாராயோ!

3. தஞ்சமென அடைந்தவர்க்குத் தண்ணருளைத் தரும்வேலா
அஞ்சலென அருளாயோ அம்பலத்தானின் திருமுருகா
செஞ்சரணம் அல்லால் செகத்தினிலே துணையும் உண்டோ?
கெஞ்சினோம் ஐயனே இரதமேறிவந்தருள் தாராயோ!

**மகா வித்துவான்.**


உங்கள் ரசனைக்கும் தேவைக்கும் ஏற்ப சகல வகையான சாறிகள், பஞ்சாபி அன் சோளிகள் சிறுவர்கள், இளையவர்களுக்கான றெடிமேட் ஆடைகள் அனைத்திற்கும் நாடுங்கள்

**ராசி சில்க்ஸ்**
70,71A. நவீன சந்தை உப்புறம்.
யாழ்ப்பாணம்.
T.P. 021 -222 5571

**நல்லி சில்க்ஸ்**
121/1 மின்சாரநிலைய வீதி.
யாழ்ப்பாணம்.
T.P. 021 -222 5573

(ச.1397)

சகல விதமான புத்தகங்கள், பாடசாலை உபகரணங்கள் அனைத்தையும் பெற்றுக் கொள்ள சிறந்த ஸ்தாபனம்

**பூபாலசிங்கம் புத்தகசாலை**
இல.04. ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

(ச.1375)

கர்ப்பிணித் தாய்மாருக்கும், சிறார்களுக்கும் ஏற்றபோஷாக்கு நிறைந்த சத்துமா



**ஜீவாகாரம்**
**அண்ணா தொழிலகம்**
T.P. 222 - 3565
இணுவில்

(ச.1394)

சகல விதமான புத்தகங்கள், பாடசாலை உபகரணங்கள் அனைத்தையும் பெற்றுக் கொள்ள நீங்கள் நாடவேண்டிய இடம்

**ஸ்ரீலங்கா புத்தகசாலை**
இல.234. கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
T.P. 222 - 2573

(ச.1396)

❀ வெற்றுச் சாக்குகள்
❀ வெற்றுப்பைகள்
விற்பனைக்குண்டு
உள்ளூர் Hiace வான் சேவையும் பெற்றிடலாம்.
நாடுங்கள்

**ஸ்ரீ இராமராஜ் அன் சன்ஸ்**
603, கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம்.
T.P. - 222 5986

(ச.1372)

யாழ். நகரில் இணைய சேவை
(BROWSING CENTRE)

**Sri Murugan**
Computer System,
Communication Service &
Agency post office
303, K.K.S Road, Jaffna.

(ச.1364)